விலை: 30.00
பக்கங்கள்: இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2049 மார்கழி 17 செவ்வாய்க்கிழமை (01.01.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 013


Dishtv
பழைய Dishtv ரிசீவர்க்கு பதிலாக புதிய ரிசீவர் 700/= மட்டுமே
SATS-TECH
Phone: 021 222 8812, Mob:- 076 886 1160
(C-4904)

வலம்புரி வாசகர்கள் அனைவருக்கும் 2019 இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் - வலம்புரி குடும்பம்

## 2019ஆம் ஆண்டு தமிழ் மக்கள் அனைவருக்கும்

# நீதியோடு கூடிய நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்க வேண்டும்

### புத்தாண்டு வாழ்த்து செய்தியில் யாழ் ஆயர் ஞானப்பிரகாசம் வலியுறுத்து



*(யாழ்ப்பாணம்)*

*2019ஆவது ஆண்டு தமிழ் மக்கள் அனைவருக்கும் நீதியோடு கூடிய நிரந்தர அரசியல் தீர்வை பெற வழிவகுக்கும் ஆண்டாக இருக்க வேண்டும் என யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தனது புத்தாண்டு செய்தியில் தெரிவித்துள்ளார். (11ஆம் பக்கம் பார்க்க)*

## ஆளுநர் கூரே பதவி விலகல்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதியின் உத்தரவுக்கமைய வடமாகாண ஆளுநர் றொஜினோல்ட் கூரே தனது பதவி விலகல் கடிதத்தை நேற்றைய தினம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்ததாக ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் 23

## கூட்டமைப்பு அரசியல் ஆதாயம் பெற அனுமதிக்க கூடாது



### எதிர்க்கட்சி தலைவர் மகிந்த வலியுறுத்து

(கொழும்பு)

மூன்று தசாப்தகால உள்நாட்டு யுத்தத்தினால் சாதிக்கமுடியாமல் போனதை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்துக்கு அளிக்கும் ஆதரவின் மூலமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு சாதிப்பதற்கு அனுமதிக்கக்கூடாது என்று 23

## அரசியலமைப்பை ரணில் ஒருபோதும் மீற மாட்டார்

### அமைச்சர் ராஜித நம்பிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி அரசியலமைப்பை மீறினாலும், பிரதமர் ஒருபோதும் அவ்வாறு செயற்பட மாட்டார் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர், அரசாங்கத்தில் 30 23

## வடக்கு முழுவதும் இ.போ.ச சேவைகள் முடக்கத்திட்டம்

### 04ஆம் திகதி வரை காலக்கெடு

(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய ஊழியர்கள் அனைவரும் ஒன்றிணைந்து எதிர்வரும் 04ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் குதிக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

வடபிராந்திய பிரதம முகாமையாளரை மாற்றுமாறு வலியுறுத்தியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக இலங்கை 23

## யாழ். மூளாய் பகுதியில் இருவர் மீது வாள்வெட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். மூளாய் பகுதியில் வீதியில் பயணித்த இருவர் மீது வாள் வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டுள்ளது

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மூளாய் பகுதியில் வீதியில் பயணித்த இளைஞர் ஒருவரை, இரு இளைஞர்கள் வாளி 23

## ரயிலில் மோதி 27 மாடுகள் பலி

### முல்லைத்தீவு முறிகண்டி பகுதியில் சம்பவம்



(கண்டாவளை)

முல்லைத்தீவு முறிகண்டிப் பகுதியில் புகையிரதத்தில் மோதுண்டு 27 இற்கும் மேற்பட்ட மாடுகள் உயிரிழந்துள்ளன. இச் சம்பவம் நேற்று மாலை 5.30 மணி 23

### வயோதிபர்களை அச்சுறுத்தி

## 55 பவுண் நகை பணம் கொள்ளை

### அராலியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வீட்டில் தனித்திருந்த வயோதிபர்களை அச்சுறுத்தி 55 பவுண் நகைகள் மற்றும் 15 ஆயிரம் ரூபாய் பணம் என்பவற்றை கொள்ளையர்கள் கொள்ளையடித்து தப்பிச் சென்றுள்ளனர்.

வட்டுக்கோட்டை அராலி தெற்கு - உடையார்கட்டு பகுதியில் உள்ள வீடொன்றிலையே இக் கொள்ளை சம்பவம் நேற்று 24

## 333 கோடி ரூபாய் பெறுமதியான 278 கிலோ ஹெரோயின் மீட்பு

### இலங்கையில் கைப்பற்றப்பட்ட அதிகளவான போதைப் பொருள் இதுவே



(கொழும்பு)

333 கோடி ரூபாய் பெறுமதியான 278 கிலோ கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் பங்களாதேஷ் நாட்டவர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

இலங்கையில் ஒரே இடத்தில் ஒரே நாளில் கைப்பற்றப்பட்ட 23

CNR உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால், பொதிகள் விநியோக சேவை
அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை
CNR இன் புத்தாண்டு வாழ்த்துக்கள்
CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062, 077 6655413
(C-4900)

அரியாலை மக்களின் வரலாற்றுச் சாதனைப் பெருவிழா
அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட நூற்றாண்டு விழா - 2019
கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களையும் விளையாட்டுக்களையும் வளர்த்திடும் ஒரு விழா கோலாகலமாக ஆரம்பமாகி நடைபெறுகிறது.
மேலதிக விபரங்களுக்கு 30.12.2018 மற்றும் 30.09.2018 வலம்புரியைப் பார்க்கவும்.
(C-4950)

# 1ம் ஆண்டு ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு



கடந்த 12.01.2018 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தின் குலவிளக்கு

## அமரர் இராமகிருஸ்ணன் மேகலாதேவி

ஆண்டு ஒன்று கடந்து விட்டது அம்மா!
இப்பூவுலகில் நீங்கள் இல்லாததால்
எங்கள் மனம் ஏங்கி தவிக்கின்றது.

அவர்களது 1ம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை (திவசம்) இன்று (01.01.2019) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் மு.ப 11.00 ம்ணியளவில் நடைபெறும். எனவே இந்நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்ப தோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**கற்கோவளம்,**
**பருத்தித்துறை.**

(C-4943)

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்**


வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

**சிற்றி சிக்கன் ஹோம் சப்பிளை**

உங்களுக்கு கோழி இறைச்சி தேவையா?
அழையுங்கள். உங்கள் வீடுகளுக்கே
கொண்டு வந்து தருகின்றோம்

எம்மிடம் புறொயிலர், ஊர்ச்சேவல்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்.



077 838 0158, 076 471 9951
021 722 3535, 021 722 3636

**MSV பாம் டீலேர்ஸ்**
கொக்குவில் (C-4954)

இந்த புதுவருடத்தை
MSV பாமின்
தரமான
கோழியிறைச்சியுடன்
கொண்டாடி மகிழுங்கள்



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**தோற்றம்: 15.01.1950**
**மறைவு: 14.12.2017**

## குமார் சுந்தரம்

**திதி - ஏகாதசி**
**திகதி - 01.01.2019**

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

**குடும்பத்தினர்**
**இடைக்குறிச்சி மேற்கு, வரணி.**
**077 228 3312** (C-4951)




# வாழ்த்துகின்றோம்

எமது அளவெட்டி கிராமத்தின் 75 வருட கால பெருமை பெற்றதும் பல கல்விமான்கள் உருவாக ஆரம்பக் கற்கைநெறியை வழங்கியதுமான அளவெட்டி மத்தி சதானந்தா வித்தி யாலயத்தின் வளர்ச்சியில் அதிக அக்கறை கொண்டு அதனை அழகமைத்து தற்பொழுது கல்வி கற்கும் குறைந்தளவு மாணவர்களுடன் 2019 ஆரம்பத்தில் தரம் 1 - 5 வரை புதிதாக இணையும் மாணவர்களுக்கும் சேர்த்து பல நலத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

- சகல மாணவர்களுக்கும் மாதாந்தம் 1000/- வங்கியில் வைப்பு செய்தல்
- இலவச சீருடை, கல்வி உபகரணங்கள், பாதணிகள்
- காலையில் சத்துணவு + பால்

ஆகிய நலத்திட்டங்களை வழங்க உள்ள சமூக சேவையாளன் கனடா வாழ் அளவெட்டி வடக்கைச் சேர்ந்த இராசையா சிவகுமாரன் அவர்களின் தன்னலமற்ற மக்கள் சேவையினையும் பாராட்டி வாழ்த்துவதுடன் எமது மக்கள் கூடிய பிள்ளைகளை புதிதாக இணைத்து கல்வியில் சிறந்து எமது கிராமத்துக்கு பெருமை சேர்க்க வேண்டும் எனவும் வாழ்த்துகின்றோம். அவரின் சேவையின் மூலம் சென்ற வாரம் கிளிநொச்சி மாவட்டத்தின் வெள்ளம் காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கு அரச அதிபரின் அனுமதியுடன் 400 குடும்பத்தாருக்கு அத்தியாவசிய உலர் உணவுப் பொருட் பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**அளவெட்டி நலன்விரும்பிகள்**

(C-4898)

# விஸ்டம்


விஸ்டம்

## தொழில் நுட்பக் கல்லூரி

இல63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 077 248 7774

A/L2018 தொழில்நுட்பப் பிரிவில் சித்தி பெற்றுள்ள எமது கல்லூரி மாணவர்களை

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



தே.பிரதீபன் ET 3B DR:-01 கிளி | தே.வேந்துசன் ET 2BC DR:-01 முல்லை | பா.தர்சன் BT A2B DR:-01 திருகோண | சி.திருக்குமார் ET 2BC DR:-02 கிளி | அ.கபிசங்கர் ET 3C DR:-02 முல்லை | ப.உகந்தன் BT 2BC DR:-02 முல்லை | வி.டினேஷ் ET 2BC DR:-03 கிளி | ப.டார்வின் ET BCS DR:-03 முல்லை

க.கோபிகன் BT 2AB DR:-03 யாழ் | ச.பிரியங்கா BT 2BC DR:-03 முல்லை | எம்.பஸ்லி BT 2AB DR:-03 குருநாகல் | ர.தர்சியப்பிரியன் ET 3B DR:-05 யாழ் | த.ஜீனரத் ET BCS DR:-05 கிளி | நா.நாகசீலன் BT 2AB DR:-05 யாழ் | ஏ.டக்சன் ET 3C DR:-06 கிளி | ரே.அனந்தன் ET B2C DR:-06 வவுனி

ஆ.கம்சிகா BT BCS DR:-06 கிளி | க.அபிராம் ET A2B DR:-07 யாழ் | ப.தனுசிகன் ET 3C DR:-07 வவுனி | க.ரக்சிகா BT ABC DR:-07 யாழ் | ர.திலக்சன் BT 3C DR:-08 வவுனி | ஜீ.சர்மிளன் BT B2C DR:-08 முல்லை | ரா.சுமித்தா ET ABC DR:-09 யாழ் | சி.கிருஸ்ணா BT A2B DR:-10 யாழ்

எஸ்.விதுசன் BT BCS DR:-10 முல்லை | கி.டெறிக்சன் ET 2AC DR:-11 யாழ் | ச.சர்மன் ET 2AB DR:-12 யாழ் | ர.விஜித்தா BT 2BC DR:-12 யாழ் | இ.சிந்துஜன் ET ABC DR:-14 யாழ் | பா.லக்சனா BT 3B DR:-14 யாழ் | மொஹமட் சஹர் BT B2C DR:-14 திருகோண | ப.மாதுமை BT 2BC DR:-15 யாழ்

இரா.துர்க்கா BT 3B DR:-16 யாழ் | க.ஹரிஸ் ET 2BC DR:-17 நுவரெலி | சி.விதுசன் ET ABC DR:-18 யாழ் | சே.கோபிநிருஜன் BT 2BC DR:-18 யாழ் | சி.சிவதர்சன் ET 2BC DR:-19 யாழ் | ச.சஜீபன் BT 2BC DR:-19 யாழ் | ரா.ஸ்ரீராஜதீபன் ET 3B DR:-20 யாழ் | ந.பேபிகா BT 2BC DR:-20 யாழ்

சி.சங்கவி ET 3B DR:-21 யாழ் | நி.துஜீபன் ET 3B DR:-22 யாழ் | வி.பூர்ணிமா BT 2BC DR:-22 நுவரெலி | சு.துவாரகன் ET 2BC DR:-24 யாழ் | ச.பிரத்யுன்மன் ET B2C DR:-25 யாழ் | ஜெ.பிறின்சிஹா BT 2BC DR:-25 யாழ் | கு.நவநீதன் ET 2BC DR:-26 யாழ் | சி.சிவதனுசா BT B2C DR:-28 யாழ்

செ.கோகுலன் ET B2C DR:-29 யாழ் | கு.துசாந்தன் BT B2C DR:-29 யாழ் | ஸ்ரீ.கபிலன் ET B2C DR:-31 யாழ் | சி.லவன் BT 2BC DR:-32 யாழ் | ச.ஸ்ரீரங்கன் ET 2BC DR:-32 யாழ் | சு.டனுசன் ET B2C DR:-33 யாழ் | சி.நிரோஜன் ET 2BC DR:-36 யாழ் | வி.நிருசா BT 2BS DR:-39 யாழ்

ர.நவீனா BT B2C DR:-41 யாழ் | க.சஜீபன் ET 2BC DR:-42 யாழ் | சு.பிரசாத் ET B2C DR:-44 யாழ் | கு.மதுசா BT A2C DR:-44 யாழ் | சி.தூயவன் ET B2C DR:-45 யாழ் | சு.சுரேந்திரன் BT B2C DR:-47 யாழ் | க.கஜந்தன் ET B2C DR:-48 யாழ் | ச.ஜங்கரன் ET 2BC DR:-50 யாழ்



அ.கர்சிகா BT B2C DR:-50 யாழ் | M.H.F.ஹஸ்மியா BT BCS DR:-100 [illegible]

- இம் மாணவர்கள் அனைவரையும் விஸ்டம் சமூகம் சார்பில் பாராட்டி வாழ்த்துகிறோம்.
- இம்முறை பல்கலைக்கழக அனுமதியைத் தவறவிட்ட மாணவர்கள் தொடர்ந்தும் முயற்சி செய்யுங்கள் வெற்றி நிச்சியம்

தொழினுட்பப் பிரிவில் ஒவ்வொரு வருடமும் அதிகளவான மாணவர்களைப் பல்கலைக்கழகம் அனுப்புகிறோம் என்ற பெருமையுடன் **A/L 2021, 2019 DAY** பிரிவுகளுக்கான புதிய வகுப்புக்கள் 05.01.2019 காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகின்றன.

"தரம், தனித்துவம், உயர்ந்த பெறுபேறு இதுவே எமது இலக்கு"

☎ 077 248 7774

## கூறுவிலை கோரல்

2019ஆம் ஆண்டின் பண்டிகைக் காலங்களில் வீரசிங்கம் மண்டபத்தில் விற்பனை நடவடிக்கையை மேம்படுத்த விரும்பும் வர்த்தகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்பப்படிவத்தை அலுவலக நேரத்தில் ரூபா 20 செலுத்தி சபையில் பெற்று 21.01.2019க்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்

செயலாளர்,
யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை,
இல.12, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

(C-4895)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532






அங்கீகாரம் பெற்ற முகவர்

பஜாஜ் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்

குறிப்பிட்ட பொருட்களுக்கு 30% விலைக்கழிவு உண்டு

வாழ்க்கையின் சாமர்த்தியமான சகாப்தத்திற்கு பிரவேசியுங்கள் புதுப்பொலிவுடன் பஜாஜ் மோட்டார் சைக்கிள்கள்.

ஏக விற்பனை முகவர்

கிளிநொச்சி மண்ணின் பஜாஜ் அசல் உதிரிப்பாகங்களுக்கான

தரணீஸ் மோட்டர்ஸ் கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி.
021 228 0053, 077 459 2429, Hotline: 0777 418 940

கிளை: ஏ9 வீதி, பரந்தன்


## 11ம் ஆண்டு நினைவலைகள்

### அமரர் தியாகராசா மகேஸ்வரன்

(முன்னாள் பா.உ. இந்து சமய விவகாரங்கள் அமைச்சு)



இன்று உம் நினைவு
ஈரைந்துடன் ஓராண்டு
இன்றும் தொடர்கிறது இடைநடுவில்
எம் இனத்தின் உயிர் பறிப்பு
நெஞ்சுரங் கொண்டோர் நிமிர்வில்
உம்போல் எம் நினைவுக்கு எவருமில்லை
பள்ளித் தலங்கள் - ஆலயங்கள் என்றுங்கள்
பணிகளின் நினைவுக்கும் இன்று பதினோராண்டு
ஊருடன் தேரிழுத்தீர் - எங்கள்
உரிமைக்கும் தேரிழுத்தீர்
வாசலிலே தேருமில்லை - எங்கள்
வாழ்வினிலே நீருமில்லை!
வாடுகின்றோம் - ஆனாலும்
வாழுகின்றோம் உம் நினைவாய்

**இணுவையூர் வி.கே.குகானந்தன்**
**உறுப்பினரும் சமாதான நீதவானும்**
**நல்லூர் பிரதேச சபை, ஐக்கிய தேசிய கட்சி**

**மஞ்சத்தடி, இணுவில்.**

(C-4958)


அங்கீகாரம் பெற்ற முகவர்





சிவகுரு ஹாட்வெயார்
021 228 5380, 077 741 8940

சிவகுரு மோட்டர் பைக் சேல்ஸ் சென்டர்




ஏ-9 வீதி, பரந்தன். 021 228 0155

அங்கீகாரம் பெற்ற முகவர்

விவசாயிகளின் உற்ற நண்பன் TAFE ட்ரக்டர்



ஹொண்டா அங்கீகாரம் பெற்றமுகவர்

கிளிநொச்சி ஏ-9 வீதி,
கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி.
ஏ-9 வீதி, பரந்தன் 021 228 0155

கிளை : ஏ9 வீதி, பரந்தன்


அண்மைக்கால அரசியலுக்குள் நாம் இனம் கண்டு கொண்ட தமிழர் தம் தலைவன்

அமரர் **தியாகராசா மகேஸ்வரன்** அவர்கள் மறைந்த



## 11ம் ஆண்டு நினைவஞ்சலி

### 01.01.2019

நாணயம் மிக்கதொரு வர்த்தகப் பெருமகனாக இருந்து கொண்டு இறுதியிலே அரசியலுக்குள் இணைந்தவரல்ல அமரர் தியாகராஜா மகேஸ்வரன் அவர்கள். அவருடைய துடிப்புமிக்க இளமைக்காலம் முழுவதுமே அவர் அரசியல் நாட்டமுடையவராகவே இருந்தார். படிக்கின்ற காலத்திலேயே மும்மொழிப் புலமைகொண்டவராகவும், மும்மொழியிலேயும் அரசியல் உரைகள் ஆற்றவல்லராகவுமே இருந்தார். அரசியல் உணர்வுகளுக்கு சமாந்தரமாக சமய உணர்வுகளும், சமூக உணர்வுகளும் அவரிடம் மேலோங்கியிருந்தது. ஆகம நெறிகளையும், ஆலய நெறிகளையும், யாகங்கள், வேள்விகள், கிரியை முறைகள் போன்றவற்றையும் சிறந்த முறையிலே கற்றுணர்ந்து கடைப்பிடிக்கின்ற பெருந்தகையாக விளங்கியவர் அமரர் மகேஸ்வரன் அவர்களாவார்.

மும்மொழிப் புலமை இருந்தபோதிலும் அமரர் மகேஸ்வரன் அவர்கள் மிக எளிமையாகவே நடந்து கொள்வார். எந்த மொழியைச் சார்ந்தவராயினும் அவர்களுடன் அவர்களுடைய மொழியிலேயே மிகச் சிறப்பாகவும், நகைச்சுவையோடும் பேசி மகிழ்ச்சி அடையச் செய்வார். மாடமாளிகைகளிலே கூட கோபுரங்களிலே மிகச்சிறப்பாக இருப்பார் என்று எண்ணி அவரை நாடிச்செல்பவர்கள் சென்ற பின்னால் தான் அப் படியல்ல அவர் மக்களின் மனங்களிலேயேதான் குடியிருக்கின்றார் என்ற உண்மையை உணர்ந்து கொள்ள முடியும். ஆலயப்பணிகளையும், சமயப்பணிகளையும் செய்துகொண்டு மகேஸ்வரன் அவர்கள் சும்மா இருந்து விட வில்லை. அவர் அரசியல் பிரவேசம் செய்வதற்கு முன்னரே சமூகத்தின் சகலமட்டங்களிலேயும் புகுந்து சமூகப்பணிகள் பல ஆற்றியவர். கல்விக்காகவும், கலைகளின் வளர்ச்சிக்காகவும் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தவும் அவர் சமூகத்திற்காக அளப்பெரும் சேவையாற்றியுள்ளார் என்பதை மகேஸ்வரன் என்ற பெயரை உச்சரிக்கின்றபோதே கண்கலங்கிக் கரம் கூப்புகின்ற மக்களிமிருந்து நாம் நன்கு அறிந்து கொள்ளமுடியும்.

தமிழகத்தின் தனிப்பெரும் தலைவன் எம்.ஜி.ராமச்சந்திரன் அவர் கள் எவ்வாறு தன் தொழிலிலே கவனமாக இருந்து கொண்டு கொடை களிலேயும், தர்மத்திலேயும் மேலோங்கி "ஒரு காலம் வரும் என் கடமை வரும்" என்று அரசியலை நோக்கி நகர்ந்தாரோ அதேபோலவே அமரர் மகேஸ்வரன் அவர்களும் நடந்து கொண்டு தமிழர்களும் தமிழர் தம் பிரதேசங்களும் மிக மிக மோசமாக அழிக்கப்பட்டுக் கொண்டிருந்த போது "ஒரு காலம் வரும் என் கடமை வரும்" என அரசியல் பிரவேசம் செய்வதோடு பொருளாதாரத் தடைகளும், போக்குவரத்துத் தடைகளும், தமிழர் மீதும் தமிழர் தம் பிரதேசங்கள் மீதும் விதிக்கப்பட்டிருந்த அக் காலத்திலே அந்த இரண்டு தடைகளையும் தகர்த்தெறிவதற்காக தன் வர்த்தக வழிமுறைகளைச் சாதகமாக்கியும், ஐக்கிய தேசியக்கட்சியிலே இணைந்து கொண்டு அரசியலைச் சாதகமாக்கியும் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டிருந்த இந்த இரண்டு தடைகளையும் தகர்த்தெறிந்த பெருமை அமரர் மகேஸ்வரன் அவர்களுக்குரியதேயாகும்.

தலைவர்களிடையே போலிகளும், வேசங்களும், தலைவிரித் தாடிக்கொண்டிருந்த அக்கால கட்டத்திலே வடக்கு மாகாணத்தின் ஒரேயொரு ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதிநிதியாக பாராளுமன்றம் சென்று தமிழ் மக்களின் ஒரே ஒரு குரலாக தன்குரலை ஒலிக்கவிட்ட தனிப்பெரும் தலைவன் அமரர்.மகேஸ்வரன் அவர்களாவார். தன்னுடைய வாழ்வையும், வளத்தையும் பெருக்குவதற்காக வன்றி தமிழ் மக்களும் தமிழர்தம் பிரதேசங்களும் இழந்தவற்றை பெறுவதற்காக அமைச்சுப் பதவியையும் ஏற்று அர்ப்பணிப்போடு கூடிய சேவையாற்றினார். அதனால் சமயஸ்தலங்களும் சமுயங்களும் புதுப்பொலிவுபெற்றன.

மக்களுக்கு வாழ்வாதார உதவிகள், வீட்டுத்திட்டங்கள், வேலைவாய்ப்புக்கள் என்று அமரர் மகேஸ்வரன் அவர்கள் ஆற்றிய சேவை அளப்பரியதாகும். அவர்கள் தான் ஒரு பெரும்பான்மை கட்சியோடு இணைந்திருக்கின்றேன் என்றும் அவர் ஒருபோது வாயடைத்துப்போய் இருந்ததில்லை. உரியதை உரிய நேரத்திலே தட்டிக்கேட்கின்ற தன்மையும், நெற்றிக்கண்ணைத்திறந்தாலும் குற்றம் குற்றமே என்று கூறுகின்ற தன்மையும் அவரிடம் எப்போதுமே குடிகொண்டவைகளாகும்.

ஒரு கட்டத்திலே மகேஸ்வரன் அவர்களே எங்களின் ஏகோபித்த தலைவன் என்று தமிழ் மக்களெல்லாம் ஏற்றுக்கொண்டு அவரின் பின்னால் அணி திரள்கின்ற வேளையிலே தமிழ் மக்களின் சாபக்கேடு என்று தான் குறிப்பிடலாம். அன்று புதியதொரு ஆண்டு பிறக்கின்ற வேளையிலே ஆலய வளாகத்துள்ளே அமரர் மகேஸ்வரன் அவர்கள் தனது விருப்பத்திற்கு மாறாகவும் எங்கள் விருப்பத்திற்கு மாறாகவும் எங்களிடமிருந்து பிரிக்கப்பட்டார். அவரின் ஆத்மாவானது இறைவனோடு சங்கமித்து மறைந்துபோன அமரர் மகேஸ்வரன் அவர்களையும், அவர் ஆற்றிய சேவைகளையும் வெற்றிடமாக்கி விடுவோமோ என்று நாம் எண்ணிக் கலங்கி நின்றவேளை அவருடைய துணைவியார் வீரமங்கை திருமதி விஜயகலா மகேஸ்வரன் அம்மையார் அவர்கள் தலைவனின் பணியைத் தான் தொடர முன்வந்திருப்பது வீர மறவன் மகேஸ்வரன் அவர்களுடைய துணிச்சல்மிக்க மற்றுமோர் அத்தியாயமாகும். அமரர் மகேஸ்வரனுக்கு நாம் செலுத்தும் அஞ்சலியானது எமக்காக களமிறக்கியிருக்கின்ற திருமதி விஜயகலா மகேஸ்வரன் (கல்வி இராஜாங்க அமைச்சர்) அம்மையார் அவர்களுக்கு நாம் கொடுக்கும் ஆதரவேயாகும்.

**வாழ்க! திருமதி விஜயகலா மகேஸ்வரன் அம்மையார் அவர்கள்; வளர்க மகேஸ்வரன் அவர்களின் எண்ணங்கள் பணிகள்; வெல்க தமிழர் தம் வாழ்வும் வளமும்**

வட்டுக்கோட்டை. 01.01.2019 (C-4953) வட்டுக்கோட்டை தொகுதி வாழ் மக்கள்

# பாதுகாப்பு அமைச்சின் கீழ் பொலிஸ்; ஜனாதிபதியின் தீர்மானத்தால் ஆபத்து

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவின் அதிரடித் தீர்மானம் ஆபத்தான கட்டத்தை அடையவுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று எச்சரித்துள்ளது.



பாதுகாப்பு அமைச்சின் கீழ் பொலிஸ் திணைக்களத்தை இணைத்துள்ளமையின் மூலம் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் கீழ் பொலிஸ் திணைக்களத்தை வைத்து கொள்வதற்கு ஜனாதிபதி மேற்கொண்ட தீர்மானம் 2013ஆம் ஆண்டிற்கு முன்னர் காணப்பட்ட ராஜபக்ஷ ஆட்சியை நோக்கி மீண்டும் நாட்டை கொண்டு செல்லும் முயற்சியாகவுள்ளதென குறிப்பிடப்பட்டுள்ளது.

1991ஆம் ஆண்டு பொது நலவாய நாடுகள் இணக்கம் வெளியிட்ட ஹராரே ஒப்பந்தத்திலுள்ள நல்லாட்சி கொள்கையை, மீறும் வகையிலும், மனித உரிமை பாதுகாப்பிற்கு எதிராக செயற்படும் வகையிலும் ஜனாதிபதியின் தீர்மானம் உள்ளதென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் கீழ் பொலிஸ் திணைக்களம் கொண்டு வரப்பட்டது.

எனினும் பின்னர் அந்த அமைச்சு, மனித உரிமை பாதுகாப்பு தொடர்பிலான சிறந்த பாடம் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமைய அமைக்கப்பட்டது.

இருப்பினும் தற்போதைய ஜனாதிபதி அந்த நடவடிக்கையை பின்னோக்கி கொண்டு சென்று பாதுகாப்பு அமைச்சின் கீழ் பொலிஸ் திணைக்களத்தை வைத்து கொள்வதற்கு தீர்மானித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மாணவர்களை மகிழ்வூட்டும் செயற்றிட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் தரம் ஒன்றுக்காக அனுமதி பெற்ற மாணவர்களுக்கு நாளை முதல் மாணவர் மகிழ்வூட்டல் செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை கால்கோள் விழாவும் இடம்பெறுமென வடமாகாண ஆரம்பப்பிரிவின் பிரதிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சற்குணராஜா தெரிவித்தார்.

புதுமுக மாணவர்களை மகிழ்விற்கும் இச் செயற்பாடு சகல பாடசாலைகளிலும் இடம்பெறுவதோடு கால்கோள் விழா தேசிய ரீதியாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள பன்னிரண்டு வலயங்களில் இக் கால்கோள் விழா நடத்தப்பட்டு ஒரு வலயத்தைத் தெரிவு செய்து மாகாணம் அனுப்ப வேண்டுமெனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளில் ஆரம்பப்பிரிவின் கற்பித்தல், கலைத்திட்டங்கள், பெற்றோருக்கான கூட்டங்கள் மற்றும் தரம் 2-5 வரையான மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற வேண்டுமெனவும் இந்த நிகழ்வுகளில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் மற்றும் அபிவிருத்திச் சங்கத்தினரின் பங்களிப்பும் இருக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)


## 31ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
12
12
1944

உதிர்வு
02
12
2018

அமரர்.நாகலிங்கம்
சிவகுருநாதன் (அப்பு)

அன்பை சுமந்து அல்லும் பகலும் எமை நினைந்து
இன்பம்சுமக்க வைத்த அப்பா
எங்களை தவிக்க விட்டுஎங்கு சென்றீர்கள்
சென்றயிடம் காணாது எம் சிந்தை வாடுதப்பா
எமக்கு பாரினில் பலர் பக்கத்துணையிருந்தாலும்
உங்கள் துணைபோல் வருமா
உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனிடம் கையேந்தி நிற்கின்றோம்.

01.01.2019 இன்று அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வவுனியா. (6863) குடும்பத்தினர்.

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திரு.தியாகராசா
மகேஸ்வரன்

(முன்னாள் இந்து கலாசார அமைச்சரும்
யாழ்., கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும்)

அப்பாவே!
தித்திக்க அன்பை ஊட்டி
திசை எட்டும் புகழைக் கூட்டி
எத் திக்கில் விண் விரைந்தீர் அப்பா!
ஆண்டுகள் பதினொன்றாகி
மீண்டிடும் நினைவுகளைச் சுமந்து
உயர்ந்திடும் எம் வாழ்வினை
அதிசய நட்சத்திரமாய் இருந்து
ஆசீர்வதியுங்கள் அப்பா!!!

பிள்ளைகள் - பவதாரணி(மகள்),
பிரணவன்(மகன்), பவித்திரா(மகள்)

தகவல் : திருமதி விஜயகலா மகேஸ்வரன்
இல.32, 36ஆவது ஒழுங்கை, கொழும்பு - 06. தொலைபேசி : 2360679
இல.276, பலாலி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 021-2221877



தோற்றம் : 10.01.1966 மறைவு : 01.01.2008

# ஹயஸில் கஞ்சா கடத்திய இளைஞன் விசேட அதிரடிப்படையினரால் கைது!

## 31 கிலோ 700 கிராம் கஞ்சா பறிமுதல்

(யாழ்ப்பாணம்)

ஹயஸ் வானில் கஞ்சா கடத்திய இளைஞனை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளதுடன், அவரிடமிருந்து 31 கிலோ 700 கிராம் நிறையுடைய கஞ்சாவையும் பறிமுதல் செய்துள்ளனர்.


யாழ்ப்பாணம் புங்கன்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் கஞ்சா மீட்கப்பட்டுள்ளதுடன், அதைக் கொண்டு சென்ற நபரையும் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் அரியாலை ஏ.வி. வீதிப் பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய இளைஞர் ஒருவர் ஹயஸ்வான் ஒன்றில் பொதிகள் செய்யப்பட்ட நிலையில் 31 கிலோ 700 கிராம் நிறையுடைய கஞ்சாவை எடுத்துச் சென்றுள்ளார்.

அப்போது, விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் இளைஞர் சென்ற ஹயஸ் வாகனத்தை சோதனையிட்ட போதே வாகனத்திற்குள் பொதிகள் செய்யப்பட்ட நிலையில் கஞ்சா காணப்பட்டுள்ளதுடன், உடனடியாக விசேட அதிரடிப் படையினர், வாகனம் உட்பட கஞ்சாவையும் கைப்பற்றியதுடன், அந்த இளைஞரை கைது செய்து யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் பொலிஸார் கைதுசெய்யப்பட்ட நபரிடம் விசாரணை மேற்கொண்டு வருவதுடன், கைப்பற்றப்பட்ட 31 கிலோ 700 கிராம் நிறையுடைய கஞ்சாவையும் வாகனத்தையும் யாழ்ப்பாணம் நீதிமன்றில் பாரப்படுத்துவதற்கான நடவடிக்கையையும் முன்னெடுத்துள்ளனர். (இ-101)

## வீதியைப் புனரமைக்கக் கோரிக்கை





(யாழ்ப்பாணம்)

வீமன்காமம் வறுத்தலை விளான் மயிலிட்டிக்குச் செல்லும் பிரதான வீதியானது அப்பகுதியில் மக்கள் மீள் குடியேற்றப்பட்டு 3 வருடங்கள் கடந்தும் இதுவரை புனரமைக்கப்படாமல் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இருநூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்ற இப்பிரதேசத்தில் 5 கிலோ மீற்றர் தூரம் வரையான வீதி, மண் வீதியாகக் காணப்படுவதுடன் ஓர் இடத்தில் 3 அடி ஆழமான பள்ளமும் காணப்படுகிறது.

இதனால் விபத்துக்களும் இடம்பெறுகின்றன.

எனவே இந்த வீதியை விரைவாக புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-5-10)

## நீர்ப்பற்றாக்குறையை நிவர்த்திக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பிரதேசத்திற்கு இந்த வருடாந்த தொடக்கத்தில் நீருக்கான தட்டுப்பாடு ஏற்படவுள்ளதாக காரை அபிவிருத்திச் சபையின் தலைவர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இப் பிரதேசத்திற்கு சுமார் ஒரு இலட்சம் லீற்றர் நீரை ஒவ்வொரு நாளும் வலி. தென்மேற்கு பிரதேசசபை வழங்கி வந்த போதும் தற்போது 45 ஆயிரம் லீற்றராக மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

எனவே மக்களின் நீர் தேவையைக்கருத்தில்கொண்டு நீர் வழங்கும் அளவை அதிகரிக்குமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-5-10)

## திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து சமயப் பேரவை ஸ்ரீ சிவகாம சுந்தரி சமேத ஸ்ரீமத் நடராஜர் கோவில் திருவாசக முற்றோதல் எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணியளவில் ஆரம்பமாகும். இதில் நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் ஆசியுரையும் இடம்பெறும். (இ

>>>>>>>>>>>>>>>>>>>>

(யாழ்ப்பாணம்)

யாழ்.கந்தர்மடம் குமாரசாமி வீதி ஸ்ரீ சிவகுருநாத குருபீட மகாதேவா சுவாமிகள் ஆச்சிரம வேதாந்த மடத்தில் திருவாசக முற்றோதல் எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிமுதல் நடைபெறும். (இ-5-60)

## க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள்-2018

**யாழ். இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்**

**கலைப்பிரிவு**

அ.ஷஞ்சீவன்-3ஏ, இ.பெனாயா-ஏபிசி, ம.கேனுஜா-2ஏஎஸ், ம.நிரோஜினி-ஏ2சி, தே.றொசாந்தன்-2பிசி, ம.கேனுஜன்-2பிசி, ப.நிகோமி-2பிசி, சு.தஷிந்தன்-பி2சி, ம.ஜராஸ்-3சி, யோ.உசாந்தினி-பிசிஎஸ், ஜெ.பவதர்சினி-2பிசி.

**யாழ்.யூனியன் கல்லூரி தெல்லிப்பழை**

**கலைப்பிரிவு**

த.அன்றூட் ஜக்சன்-3ஏ, அ.நிசன்-3ஏ, சு.சுவிஸ்ரன்-2ஏசி, ம.கோசலா-ஏ2பி, சி.மேரிஜஸ்மினி-ஏ2சி, ம.தனுயா-3பி, நி.நிவேதிகா-2ஏபி.

**விஞ்ஞானப்பிரிவு**

சி.சிவதரன்-ஏபிசி

**வணிகப்பிரிவு**

வ.சாந்தகுமார்-ஏபிசி.

**யாழ்.வேலணை மத்திய கல்லூரி**

**கணிதப் பிரிவு**

எஸ்.கயூரன்-ஏ2பி

**விஞ்ஞானப் பிரிவு**

வி.தருஜிகா-ஏ2பி

**தொழில்நுட்பவியல் பிரிவு**

ஆர்.விஜிதா-2பிசி, எஸ்.கோபிகிருஸ்ணன்-2பிசி, என்.பாபிகா-2பிசி, கே.துசாந்தன்-பி2சி, எஸ்.நிரோஜன்-2பிசி, ஆர்.நவீனா பி2சி, ஏ.கர்சிகா-பி2சி, வி.தகிலன்-2பிஎஸ், எஸ்.சிலக்ஷன்-பிசிஎஸ், எஸ்.சரணியா-பிசிஎஸ், எஸ்.பிருந்தன்-3சி, வி.யதுர்சன்-3சி.

**கலைப்பிரிவு**

ஏ.லிட்வின்-2ஏசி, வி.மதுசா-ஏ2பி, கே.கார்த்திகா-ஏபிசி, வி.றஜீதா-ஏ2சி, ரி.வினோசிகா-2பிசி, கே.கம்சாஜினி-2பிஎஸ், கே.சுயானா-பிசிஎஸ், வி.துவாரகா-பிசிஎஸ்.

**யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்**

**வர்த்தகப் பிரிவு**

ம.தனுஷ்காந்-ஏ2பி, சோ.மயூரினி-ஏபிசி.

**கலைப்பிரிவு**

கீ.கீர்த்திகா-ஏபிசி, அ.றொகான்-ஏபிசி, ய.தர்சினி-ஏ2சி, நா.தனுசியா-ஏபிஎஸ்.

**யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி**

**கணிதப் பிரிவு**

ஏ.கஸ்ரோ டிரோன்-3ஏ, ஏ.அன்ரன் சிந்துஜன்-ஏ2பி, பி.திசான்-ஏபிசி.

**உயிரியல் பிரிவு**

ரி.சஞ்சீவன்-ஏபிசி

**வர்த்தகப்பிரிவு**

எஸ்.றொனால்ட்-3ஏ, எம்.டிசாந்தன்-3ஏ, ஆர்.றொசான்-3ஏ, ஜி.ஏனோஷ்-2ஏபி, ஏ.மொறின்ஸ்ரன்-ஏ2பி.

**கலைப்பிரிவு**

ஏ.அர்ஜன்ராஜ்-2ஏபி, இ.பேரின்சன்-2ஏபி, ஏ.ஜெயக்குமாரன்-2ஏபி, ஜெ.சுனில் குமார பீரிஸ்-ஏ2பி, வை.ஜெரோன்ஸ் பஸ்ரி-2ஏசி, எம்.எப்.எக்ஸ்.றஜீதன்-2ஏசி, ஜெ.ஜெயதர்ஷன்-ஏபிசி, எம்.ஏ.ஜதுசன்-ஏபிசி.

**தொழில்நுட்பப் பிரிவு**

ஆர்.தர்சியப்பிரியன்-3பி, ஏ.ரி.ஜோன்கில்ரன்-பி2சி, ஏ.டிலக்ஷன்-பி2சி.

**யாழ்.மானிப்பாய் மகளிர் கல்லூரி**

**கலைப்பிரிவு**

ர.நிவேதா-3ஏ, சி.சஜிஸ்ரினா-3ஏ, சி.வர்ஷிகா-3ஏ, உ.சுஜா-3ஏ, ர.தர்ஷிகா-3ஏ, அ.மேரி வினோதினி-2ஏபி, வ.வித்தியா-2ஏசி, வி.நிருஷா-2ஏசி, கோ.ஜெனோபா-ஏ2பி, ச.பிரியங்கா-ஏ2பி, மு.மிதுஷாயினி-ஏ2பி, ஆ.உஷாலினி-ஏ2பி, கோ.கோசலா-ஏ2பி, ஜீ.சுஜிபா-ஏ.2பி

**வர்த்தகப் பிரிவு**

பு.மகிழரசி-3ஏ, யோ.டிஷானி-2ஏபி, கு.டுபீஷா-2ஏபி, செ.தர்ஷிகா-ஏ2பி, சி.லயாளினி-ஏ2பி.

**கணிதப்பிரிவு**

**ஆங்கில மொழி மூலம்**

அ.கௌசிகா-2ஏபி, இ.கஜாராணி - 2பிசி

**தமிழ்மொழி மூலம்**

தி.பானுப்பிரியா-ஏபிசி, சி.சுதர்சிகா-2பிஎஸ், க.லக்ஷி-2பிஎஸ்.

**உயிரியல் பிரிவு**

து.அபுந்தினி-ஏபிசி, ர.அபிராமி-2பிசி.

**யா/யாழ்ற்ரன் கல்லூரி**

**கணனி**

**விஞ்ஞானப்பிரிவு**

சு.கஜந்தன்-ஏ2பி (மா.நி 01), சி.செந்தூரன்-சி2எஸ்.

**கணிதப்பிரிவு**

தி.சயந்தன்-2ஏசி, க.ஜெயமதுஷன்-பிசிஎஸ், சி.நவநீதன்-2சிஎஸ்.

**வர்த்தகப் பிரிவு**

தே.றொபின்சியா-2பிசி.

**கலைப்பிரிவு**

மோ.கிர்சிகா-2பிசி, க.கஜந்தன்-பி2சி, ச.பிரதீபா-பி2சி, சோ.நிரோஜினி-சி2எஸ், ப.துவாரகா-சி2எஸ், கே.டிசாந்தன்-3எஸ்.

## பிரகீத் எக்னெலிகொட கடத்தல் படையினருக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவை கடத்திக் காணாமல் போகச் செய்தமை தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய சி.ஐ.டியினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.



இதற்காக அவர்கள் சட்டமா அதிபரின் ஆலோசனையை கோரியுள்ளனர்.

பிரகீத் எக்னெலிகொட தடுப்பில் இருந்து காணாமல் போனமை வரையிலான விசாரணைகள் தற்போது முற்றுப்பெற் றுள்ளன.

எனினும் மேலதிக விசாரணைகளின்போது சந்தேகிக்கப்படும் இராணுவத்தின் புலனாய்வு பிரிவு அதிகாரிகள் தொடர்பில் இராணுவத்தினர் தமது ஒத்துழைப்பை வழங்கவில்லை என்று பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனையடுத்தே குறித்த இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக வழக்கை தாக்கல் செய்ய சி.ஐ.டியினர் எதிர்பார்த்துள்ளனர்.

இராணுவத்தின் ஒத்துழைப்பு இல்லாமல் இந்த விசாரணைகளை நிறைவு செய்யமுடியாது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிரகீத் எக்னெலிகொட 2010ஆம் ஆண்டு ஜனவரி 24ஆம் திகதி ஜனாதிபதி தேர்தலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் கடத்தப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)




நீர்வேலியில் அமைந்துள்ள வலி.கிழக்கு தென்பகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் 25 வருட சேவையை பூர்த்தி செய்த பணியாளர்களை கௌரவித்த நிகழ்வு அண்மையில் சங்கத் தலைமை காரியாலய மண்டபத்தில் தலைவர் நா.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்களாக யாழ்ப்பாணம் கூ.அ.உ. ஆணையாளர் பரீன் ஹஸ்ஸானா அப்துல் சமியூ மற்றும் வலி.கிழக்கு பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன் ஆகியோர் கலந்து கொண்டனர். கௌரவிக்கப்பட்ட பணியாளர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர் )

ஸ்ரீ ராம ஜெயம்

அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்
இணுவில்-மருதனார் மடம், சுன்னாகம்
இசை ஆராதனை
01.01.2019 செவ்வாய்க்கிழமை பகல் 11 மணிக்கு
பாட்டு :- தரங்கினி பாலமுருகன்
வயலின் :- உ.சதிஸ்குமார்
மிருதங்கள்:- குலதீபன்
அனுசரணை:-பிரதீபன்
உரும்பிராய்

வலம்புரி 021 221 7603,
விளம்பரத் தொடர்புகளுக்கு: 021 567 1532

# நீதியரசர் விக்னேஸ்வரன் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி



பல எதிர்பார்ப்புக்களுடன் 2019 ஆம் ஆண்டு பிறக்கின்றது. மக்கள் தமது ஜனாதிபதி, மாகாண, பாராளுமன்ற பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் ஆண்டாக இவ்வாண்டு இருக்கப் போகின்றது.

அத்துடன் இலங்கை நாடானது சர்வதேசத்திற்கு தான் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற இதுவரையில் என்ன செய்துள்ளது என்பது பற்றி ஜெனிவாவில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுமிருக்கும்.

2018 டிசெம்பர் 31இற்கு முன்னர் எமது மக்களின் காணிகளைத் திருப்பிக் கொடுக்க ஜனாதிபதியால் ஆணையிடப்பட்டிருந்தும் படையினரால் தவணை கோரப்பட்டுள்ளது. அதே போல் ஜெனிவாவிலும் தவணை கேட்கப்படலாம்.

எமது பிரச்சினைகளைத் தாக்காட்டி, தாமதித்து, தீர்வு ஏதும் தராது, தமக்கேற்ற தீர்வுகளை எம்மேல் திணிக்க வைக்க அரசாங்கங்கள் எதிர்பார்த்திருக்கும் ஆண்டாகவும் இது அமையலாம்.

எது எவ்வாறிருப்பினும் இந்நாட்டு மக்கள் தம்முள் ஐக்கியத்தையும் பரஸ்பர புரிந்துணர்வையும் ஏற்படுத்தி நிறைவுடன் பயணிக்கும் ஒரு ஆண்டாக 2019 அமைய வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

**நீதியரசர்**
**சி.வி.விக்னேஸ்வரன்**
**முன்னாள் முதலமைச்சர்**
**வடமாகாணம்**

YICSD COLLEGE
YARL INTERNATIONAL COLLEGE OF SKILLS DEVELOPMENT
தொழில் கற்கைநெறிகளுக்கான பதிவுகள் ஆரம்பம்
18.01.2019 முன்னர் புதியவர்கள் இணையலாம்
Special OFFER
ஆங்கிலம்
# Diploma in English
கணனி
# Diploma in Microsoft Office
# Diploma in Desktop Publishing
# Diploma in Information Technology
அழகுக்கலை
# Diploma in Beauty Culture & Hairdressing
# Higher Diploma in Beauty Culture & Hairdressing
கேக் ஐசிங்
# Diploma in Cake Making & Decorating
# Higher Diploma in Cake Making & Decorating
தையல்
# Diploma in Dress Making (Tailoring)
# Higher Diploma in Dress Making (Tailoring)
ஆரி எம்பிராய்டரி
# Diploma in Aari Embroidery
# Higher Diploma in Aari Embroidery
50% OFF
* விபரங்களுக்கு நேரில் வருகைதரவும்
இல.307 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
(கண்ணாதிட்டி சந்தி Rolex வெதுப்பகத்திற்கு இடையில்)

# ஜனாதிபதி புத்தாண்டு வாழ்த்துச் செய்தி



புத்தாண்டு பிறப்பினை அண்மித்த காலமானது, நாம் கடந்து வந்த வருடத்தில் எமது வாழ்க்கையில் முகங்கொடுக்க நேர்ந்த வெற்றி தோல்விகளை பற்றியும் நிறை குறைகளை பற்றியும் மீண்டும் மீட்டிப் பார்ப்பதற்கான சிறந்த தருணமாகும்.

எதிர்காலத்திற்கு அடித்தளம் அமைக்கும் கடந்த காலத்தை மீண்டும் மீட்டிப்பார் ப்பதன் மூலமே மனிதன் தனது பாதையினை இன்னல் கள் அற்ற, வளமான பலன்களைப் பெறக்கூடியதாக அமைத்துக் கொள்கின்றான்.

அவ்வாறே கடந்த வருடத்தின் தனது அனுபவங்களிலிருந்து கற்க வேண்டிய பாடங்களைக் கற்று அவற்றை சீர்தூக்கிப் பார்ப்பதன் மூலமே புதிய எதிர்பார்ப்புகளை யதார்த்தமாக்கிக் கொள்ள முடியும்.

பண்டைய பாரிய நீர்ப்பாசன படைப்புகளைக் கொண்டிருக்கும் இந்த நாட்டின் வரலாற்று மரபுரிமைகளைப் பற்றி பெருமிதம் கொள்வதோடு நின்றுவிடாது வரலாற்றை சீர்தூக்கி பார்த்த தன் பலனாகவே அத்தகைய தனிச்சிறப்புமிக்க நீர்ப்பாசன படைப்புகளுக்கு புதிய வியாக்கியானத்தை பெற்றுக் கொடுக்க எம்மால் முடிந்திருக்கின்றது.

"கடந்த வருடத்தில் எமக்கு பயன்பட்ட வார்த்தைகள் கடந்த வருட மொழிக்கு சொந்தமானவையாகும். ஆயினும் புத்தாண்டின் வார்த்தைகளானது, அதற்கே உரித்தான புதிய அர்த்தங்களை பெற்றுக் கொடுப்பதற்கே தயாராக இருக்கின்றன" என டி.எஸ்.எலியட் எனும் மகா கவி கூறியிருக்கின்றமை இதற்கு சான்று பகர்கின்றது.

கடந்த காலத்தில் கை நழுவிய வாய்ப்புகளை அறிந்து அதன் மூலம் புத்தம்புது வழிகளை நோக்கி எம்மை இட்டுச் செல்லக்கூடிய வரலாற்றில் மிக முக்கியமான காலப் பகுதியே இன்று மலர்கின்றது.

அத்தோடு இணைந்த அனைத்து சவால்களையும் தனி மனிதன் என்ற வகையிலும் ஒரு தேசம் என்ற வகையிலும் வென்றெடுக்க வேண்டியதே எம்முன் இருக்கும் சவாலாகும். மலரும் 2019 ஆம் புத்தாண்டில் ஒழுக்கம், நல்லிணக்கம் மற்றும் சுபீட்சம் ஆகியவற்றை அடையக் கூடிய பரந்த பாதையில் முன்பை விட கூடுதல் கரிசனையுடனும் கவனத்துடனும் அடையாளம் காண வேண்டிய உறுதிப்பாட்டைக் கொண்டதாகவே இந்த புத்தாண்டு அமைகின்றது.

அந்த வகையில் புத்தாண்டு மலரும் இத்த ருணத்தில் எனது அன்புக்குரிய இலங்கை மக்களின் எல்லாவித எதிர்பார்ப்புகளும் நிறைவேற வேண்டும் எனவும் அனைவரது வாழ்க்கையும் வளமும் செழிப்பும் மிக்கதாக அமைய வேண்டும் எனவும் மனப் பூர்வமாக பிரார்த்திக்கின்றேன்.

**மைத்திரிபால**
**சிறிசேன**
**ஜனாதிபதி**

சக்தி வாய்ந்த இயற்கைப் பசளை
மண்புழு உரம்
"பசளைகளின் ராஜா"
ஒரு கிலோ ரூ 150/- மட்டுமே
திருநாவுக்கரசு நினைவு மாதிரிப் பண்ணை,
மாவிட்டபுரம்
SLS Trust
0771 726 583
(6857)

## இராசி பலன்

**மேடம்:** விருப்பங்கள் நிறைவேறும் நாள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**இடபம்:** நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், முயற்சிகளில் முன்னேற்றமுண்டு, போசன நன்மையுண்டு, கல்யாணக் கனவுகள் நனவாகலாம், கௌரவமான நாள்.

**மிதுனம்:** செய்தொழில் மேன்மையுண்டு, தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**கடகம்:** தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும் நாள், வாகன சுகமுண்டு, கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** நண்பர்கள் சொல்லும் யோசனை உங்களுக்கு நல்லதாகத் தெரியும், ஆதாயம் அதிகரிக்கும் நாள், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு

**கன்னி:** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், விவாதங்களைத் தவிர்ப்பதன் மூலம் வளர்ச்சி காணும் நாள், வியாபாரத்தை விரிவுபடுத்த முற்படுவீர்கள்.

**துலாம்:** குடும்பத்தில் நிலவிய கருத்து முரண்பாடுகள் அகலும், பணப்பிரச்சினைகள் சுமுகமாக அமையும், காரிய வெற்றிக்கு கந்தனை வழிபட வேண்டிய நாள்.

**விருச்சிகம்:** வீட்டுப் பிரச்சினைகளை சுமுகமாக தீர்த்துக் கொள்வீர்கள், சேமிப்பு உயரும் நாள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**தனுசு:** பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், தூரதேசத்திலிருந்து அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.

**மகரம்:** உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் வந்து சேரலாம், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**கும்பம்:** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், வீண் பழிகள் அகலும், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும்.

**மீனம்:** கொடுக்கல்-வாங்கல்களில் மனஸ்தாபங்கள் ஏற்படலாம், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், உடல்நலனில் கவனம் தேவை, பிரயாண பயமுண்டு.

**கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| செவ் | | | |
| | இராசி பலன் | | ராகு |
| கேது | | | |
| சூரி, புத சனி | குரு | சுக், சந் | |

கிரகநிலை
சந்திராஷ்டமம்
ரேவதி, அச்சுவினி
பின்னிரவு 5.40 மணிக்கு
விருச்-சந்

01.01.2019
மார்கழி 17, செவ்வாய்க்கிழமை
சூரிய உதயம் காலை 6.27 மணிக்கு
ஏகாதசி பின்னிரவு 4.38 மணிவரை
சுவாதி பிற்பகல் 12.23 மணிவரை
சுபநேரம் 10.59-12.29 மணிவரை
இராகுகாலம் 3.29-4.59 மணிவரை

வளவன்

# “எம்மை சுட்டாலும் பரவாயில்லை; காணிக்குள் செல்வோம்”

## கேப்பாபிலவு முகாமிற்குள் நுழைய முற்பட்ட மக்கள் தடுத்து நிறுத்தம்






(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கேப்பாபிலவு மக்கள் தமது பூர்வீகக் காணிகளில் அமைக்கப்பட்டுள்ள கேப்பாபிலவு முகாமுக்குள் அடாத்தாக நேற்றையதினம் நுழைய முற்பட்டவேளை தடுத்து நிறுத்தப்பட்டதுடன் பொலிஸார் குவிக்கப்பட்டு பதற்ற நிலை உருவானது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு அரச அதிகாரிகள் வரவழைக்கப்பட்டு உறுதிமொழி வழங்கப்பட்டதையடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கலைந்து சென்ற சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடந்த 2017.03.01 ஆரம்பித்த தொடர் போராட்டமானது 671 ஆவது நாளாக நேற்று கேப்பாபிலவு இராணுவ தலைமையகம் முன்பாக இடம்பெற்றுவருகிறது

இந்நிலையில் வடக்கில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகள் டிசெம்பர் 31 இற்குள் விடுவிக்கப்படும் என்ற உறுதிமொழி பொய்த்துப்போன நிலையில் நேற்றைய தினம் மக்கள் தமது காணிக்குள் தாமாக செல்வதாகத் தெரிவித்து உடைமைகளுடன் சென்றபோது இராணுவ வாயிலில் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து குறித்த முகாம் வாயிலில் மக்கள் கோசங்களை எழுப்பி கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்

மக்கள் முகாமுக்குள் நுழைய முற்பட்டதும் சுமார் 150 வரையான பொலிஸார் கொண்டுவரப்பட்டு இராணுவ முகாம் வாயில்களில் நிறுத்தப்பட்டனர். இதனைத் தொடர்ந்து குறித்த இடத்தில் பதற்றமான சூழல் உருவானது. இதனை தொடர்ந்து மக்களுடன் பொலிஸார் கலந்துரையாடியபோது இராணுவ தளபதி வந்து உறுதிமொழி தரவேண்டும் என கோரினர். அதனைத் தொடர்ந்து பொலிஸார் இராணுவத்தினர் மக்களுடன் வந்து கலந்துரையாடமாட்டார்கள் எனவும் மாவட்ட செயலாளரை அழைப்பதாகவும் தெரிவித்தனர்

இதனையடுத்து முல்லைத்தீவு மாவட்ட செயலக மேலதிக மாவட்ட செயலாளர் கோ.தனபாலசுந்தரம் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் இ.பிரதாபன், முல்லைத்தீவு மாவட்ட செயலக உதவி மாவட்ட செயலாளர் ஆ.லதுமீரா குறித்த பகுதி கிராம அலுவலர் உள்ளிட்டவர்கள் சம்பவ இடத்துக்கு வருகை தந்திருந்தனர்.

மக்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து குறித்த விடயத்தை தாங்கள் அரசாங்க அதிபர் ஊடாக ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுசென்று ஜனவரி 25 ஆம் திகதிக்குள் உரிய பதிலை பெற்று தருவதாகவும் அதுவரை போராட்டத்தை நிறுத்துமாறும் கோரினர்.

பல்வேறு முரண்பாடுகளுக்கு பின்னர் அவர்களது கருத்துக்கமைய ஜனவரி 25 ஆம் திகதி வரை தாம் போராட்டம் நடத்துமிடத்தில் தொடர்ந்து போராடுவதாகவும் 25 ஆம் திகதி தீர்வுகள் எதுவும் கிடைக்கா விட்டால் எம்மை சுட்டாலும் பரவாயில்லை. தமது காணிக்குள் செல்வோம் எனவும் தெரிவித்து இராணுவ முகாம் வாசலிலிருந்து கலைந்து சென்றனர். (2-281)




### கேப்பாபிலவு போராட்டகளத்தில்

## மக்களை அச்சுறுத்தும் வகையில் புகைப்படம், வீடியோ பதிவு



(பனிக்கன்குளம்)

வடக்கில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகள் டிசெம்பர் 31க்குள் விடுவிக்கப்படும் என்ற உறுதிமொழி பொய்த்துப்போன நிலையில் கேப்பாபிலவு மக்கள் தமது காணிக்குள் தாமாக செல்வதாக தெரிவித்து உடைமைகளுடன் நேற்று சென்றபோது இராணுவ வாயிலில் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

இதன்போது போராட்டக் களத்தில் பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டதோடு இராணுவம், பொலிஸார், புலனாய்வாளர்கள் மக்களை அச்சுறுத்தும் வகையில் புகைப்படம் எடுத்து வீடியோ பதிவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (2-281)

### வலம்புரி செய்தியை அடுத்து

## இரண்டு பாலங்களின் பணிகள் துரிதகதியில்

(பூநகரி)

பூநகரியில் இடம்பெறும் வீதி திருத்த வேலைக்காக சோபாலபிட்டி -மறவகுறிச்சி வீதியில் இரு இடங்களில் பாலம் அமைப்பதற்காக வீதியை குறுக்கறுத்து வெட்டப்பட்டு வீதி சீர் செய்யப்படாத நிலையில் காணப்பட்டமை தொடர்பில் கடந்த 29 ஆம் வலம்புரியில் செய்தி வெளியாகி இருந்தது.

இதைத் தொடர்ந்து மேலதிகாரிகளின் துரித நடவடிக்கைகளின் பயனாக அவர்களின் பணிப்பிற்கமைவாக ஒரு பால வேலை நிறைவு செய்யப்பட்டு போக்குவரத்து நடைபெறக் கூடியவாறு அமைக்கப்பட்டுள்ளது.

மற்றைய பால வேலையையும் நிறைவு செய்யும் வகையில் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வீதியில் உள்ள ஆலயத்திலும் கடந்த நான்கு நாட்களாக இடைநிறுத்தப்பட்ட பூசை வழிபாடு தொடர்ந்து நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.(2-84)

## மாணவர்களுக்கு ஒருதொகுதி கற்றல் உபகரணங்கள் வழங்கல்




(மன்னார்)

மன்னார் மாவட்ட "காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கம்" மற்றும் "பெண்கள் மற்றும் சிறுவர்களை மேம்படுத்தும் குடும்பங்களின் சங்கம்" ஆகியவை இணைந்து மன்னாரில் பாடசாலை மாணவர்களுக்கான ஒரு தொகுதி பாடசாலை மற்றும் கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்துள்ளனர்.

மன்னார் நகர சபை மண்டபத்தில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் குறித்த நிகழ்வு இடம் பெற்றது.

இதன் போது காணாமலாக்கப்பட்டவர்களின் பிள்ளைகள், அரசியல் கைதிகளின் பிள்ளைகள் மற்றும் வறிய மாணவர்கள் என 252 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

தென்பகுதியில் உள்ள பொது அமைப்புக்கள் பாதணிகளை வழங்கியுள்ளதோடு, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் பாடசாலை உபகரணங்களை வழங்கியுள்ளனர்.

குறித்த நிகழ்வில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், தென்பகுதியில் உள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் பிரதிநிதிகள், பாடசாலை மாணவர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது மாணவர்களினால் பல்வேறு நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (2-285)

## உயர்தர பரீட்சைப் பெறுபேறுகள் - 2018

கிளி/முழங்காவில் ம.வி
கலைப்பிரிவு
எம்.லக்சிகா-2ஏபி, கே.சிந்துஜா-2ஏபி.
வர்த்தகப்பிரிவு
எஸ்.மதுவர்தினி- 2ஏபி, எஸ்.மேகனா-ஏ2பி.
பொறியியல் தொழில்நுட்பம்
ரி.சுதாகரன்-2பிசி, எஸ்.சுஜீவன்-2சிஎஸ்.
கிளி/நல்லூர் ம.வி.
கலைப்பிரிவு
ரி.தமிழ்மதி-பிசிஎஸ், ஜே.விதுசிகா-2சிஎஸ், இ.சரண்யா-பிசிஎஸ்.
கிளி/ஜெயபுரம் ம.வி.
கலைப்பிரிவு
எஸ்.சாளினி-பி2சி.
கிளி/பூநகரி மத்திய கல்லூரி
கலைப்பிரிவு
பி.சிந்துஜா-2ஏபி, எஸ்.துவாரகா-2ஏபி, பி.தமிழ்ப்பிரியன்-3பி, எஸ்.பகிதனா-ஏ2சி, எஸ்.மிதுசன்-ஏசிஎஸ், கே.லோமிகா-2பிசி.
வர்த்தகப்பிரிவு
கே.மலரவன்-2பிசி, எஸ்.நிலோசி-ஏ2சி, எஸ். தமிழினி-ஏ2எஸ், கே.தாட்சாயினி-ஏபிசி.(2-84)

## இளைஞனின் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு

(பனிக்கன்குளம்)

வவுனியா ஓமந்தை அரச முறிப்பு பகுதியில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் கிணற்றிலிருந்து 24 வயதுடைய இளைஞரொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அதிகாலை வேளை தந்தை வயலுக்கு சென்று வீடு திரும்பிய சமயத்தில் வீட்டில் மகனை காணவில்லை எனத் தேடிய சமயத்தில் கிணற்றில் சடலமாக மிதந்துள்ளார்.

இதனையடுத்து அயலவர்களுக்கு சம்பவத்தை தெரியப்படுத்தியதையடுத்து அயலவர்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் ஜெகமோகன் (வயது24) எனவும் மரணத்திற்கான விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (2-281)

## பௌதீக விஞ்ஞானப்பிரிவில் முல்லைத்தீவில் முதலாமிடம்

(பனிக்கன்குளம்)

வெளியாகியுள்ள க.பொ.த. உயர்தர பரீட்சையில் பௌதீக விஞ்ஞான பிரிவில் வித்தியானந்தா கல்லூரி மாணவி யோகவாஸ் ரஜிதா ஏ2பி பெறுபேற்றை பெற்று மாவட்ட ரீதியில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

குறித்த மாணவி பாரதி சிறுவர் இல்லத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (2-281)

# கிளிநொச்சிக்கு அமைச்சர் சஜித் பிரேமதாஸ நேற்று விஜயம்;

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரிசி பொதிகளை பகிர்ந்தளித்தார்

## வீடுகள் உள்ளிட்ட உதவிகளை வழங்குவதாக உறுதி















(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்திற்கு வீடமைப்பு மற்றும் கலாசார அமைச்சர் சஜித் பிரேமதாஸ விஜயம் மேற்கொண்டு வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பில் ஆராய்ந்துள்ளார்.

நேற்று காலை 9 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு வருகை தந்த வீடமைப்பு மற்றும் கலாசார அமைச்சர் சஜித் பிரேமதாஸ கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டதோடு பாதிக்கப்பட்ட மக்களுக்கு 5 மில்லியன் ரூபா பெறுமதியில் கொண்டுவரப்பட்ட நிவாரணப்பொருட்களையும் அரிசி தொகுதி ஒன்றினை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளித்தார்.

அதனைத் தொடர்ந்து மாவட்ட செயலகத்தில் வெள்ள அனர்த்தத்தின் பாதிப்புக்கள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார். குறித்த சந்திப்பில் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரமும் கலந்து கொண்டதுடன், பாராளுமன்ற உறுப்பினர்களான சி.சிறிதரன், திலகராஜா, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இக் கலந்துரையாடலின் முடிவில் அமைச்சர் சஜித் பிரேமதாஸ ஊடகங்களிற்கு கருத்து தெரிவித்த போது, பாதிக்கப்பட்ட மக்களிற்கு வீடு உள்ளிட்ட பல்வேறு உதவிகள் முன்னெடுக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து கிளிநொச்சி, பன்னங்கண்டி ஆகிய பகுதிகளுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த அமைச்சர் குழு அங்கு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு அரிசிகளை பகிர்ந்தளித்தனர். (2-315)

## வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் மூன்று துறைகளில் முதலாமிடம்

(வவுனியா)

வெளியாகிய க.பொ.த உயர்தரப் பெறுபேற்றில் கலை, வர்த்தகம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் வவுனியா மாவட்டத்தில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளது என அதிபர் ரி.அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒகஸ்ட் மாதம் நடைபெற்ற உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் தற்போது வெளியாகியுள்ளன.

இதன்படி கலைப்பிரிவில் ச.டிலாஜினி, வர்த்தகப் பிரிவில் து.யுவதீஸ்வரன், விஞ்ஞானப் பிரிவில் அ.உதிஸ்டிரன் ஆகியோர் முதல் நிலைகளை மாவட்ட மட்டத்தில் பெற்று எமது பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

கடந்த ஆண்டு மாவட்ட மட்டத்தில் முதல் நிலைகளை அடையாத நிலை காணப்பட்ட போதும் இவ்வாண்டு நாம் அடைந்திருக்கின்றோம்.

மாவட்ட மட்டத் தில் முதல் 10 பேரில் உயி ரியல் விஞ்ஞானத்துறையில் பேரையும், கணிதப்பிரிவில் 6 பேரையும், கலைப்பிரிவில் ஒருவரையும், வர்த்தகப் பிரிவில் 4 பேரையும் எமது பாடசாலை கொண்டுள்ளது எனத் தெரிவித்தார். (2)

**கிளிநொச்சியில் முதலிடம் சு.திகழினி**



**கிளி/அக்கராயன் மகா வித்தி. கலைப்பிரிவு:- 2ஏபி**




## பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் 22 பேர் விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்பிப்பு

### கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி கல்வி வலயத்தில் விசேட தேவையுடைய 257 மாணவர்கள் கல்வி கற்பதாகவும், அவர்களுக்கு கற்பிப்பதற்கு பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் 22 பேரே உள்ளதாகவும் வலயக்கல்வி பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் தெரிவித்துள்ளார்.

தகவல் அறியும் உரிமை சட்டத்தின் ஊடாக வடமாகாணத்தில் கல்வி கற்கும் விசேட தேவையுடைய மாணவர்களின் எண்ணிக்கை, மற்றும் அவர்களுக்கு கற்பிக்கவென பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை தொடர்பில் கேட்டபோதே அவ்வாறு தெரிவித்தார். தீவக கல்வி வலயத்தில் 152 விசேட தேவையுடைய மாணவர்கள் கல்வி கற்பதாகவும், அவர்களுக்கு கற்பிக்கவென பயிற்றப்பட்ட 06 ஆசிரியர்கள் உள்ளதாகவும் தீவக கல்வி வலய தகவல் உத்தியோகத்தர் சாரங்கன் தெரிவித்துள்ளார்.

துணுக்காய் கல்வி வலயத்தில் 42 விசேட தேவையுடைய மாணவர்கள் கல்வி கற்பதாகவும், அவர்களுக்கு கற்பிக்கவென பயிற்றப்பட்ட 8 ஆசிரியர்கள் உள்ளதாகவும் துணுக்காய் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.பிருந்தா தெரிவித்துள்ளார்.

வடமராட்சி கல்வி வலயத்தில் 48 விசேட தேவையுடைய மாணவர்கள் கல்வி கற்பதாகவும், அவர்களுக்கு கற்பிக்கவென பயிற்றப்பட்ட 8 ஆசிரியர்கள் உள்ளதாகவும் வடமராட்சி கல்வி வலய கல்விப் பணிப்பாளர் யோ. ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

தென்மராட்சி கல்வி வலயத்தில் 27 விசேட தேவையுடைய மாணவர்கள் கல்வி கற்பதாகவும், அவர்களுக்கு கற்பிக்கவென பயிற்றப்பட்ட 5 ஆசிரியர்கள் உள்ளதாகவும் தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் ல.லிங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், கிளிநொச்சி, துணுக்காய் ஆகிய ஐந்து கல்வி வலயங்கள் மட்டுமே டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி வரையில் பதில் அனுப்பியுள்ளன. ஏனைய யாழ்ப்பாணம், வலிகாமம், முல்லைத்தீவு, மன்னார், மடு, வவுனியா வடக்கு மற்றும் வவுனியா தெற்கு ஆகிய ஏழு கல்வி வலயங்கள் பதில் அனுப்பவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (2-315)

## மலையாளபுரத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு அமைச்சர் திகாம்பரம் நிவாரணப் பொருட்களை வழங்கினார்

(கண்டாவளை)

கிளிநொச்சியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர்பழனி திகாம்பரம்நேற்றைய தினம் கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டார்.



கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு வருகை தந்த அமைச்சரை மாவட்ட அரசாங்க அதிபர் வரவேற்று தொடர்ந்து மாவட்ட அரசாங்க அதிபரிடம் வெள்ளப் பாதிப்புகள் தொடர்பில் கேட்டறிந்து வீடமைப்புத்துறை அமைச்சர் சஜித் கலந்து கொண்டிருந்த வெள்ள அனர்த்த கலந்துரையாடலிலும் பங்கு கொண்டார்.

தொடர்ந்து கிளிநொச்சி மலையாளபுரம் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண பொருட்களை பகிர்ந்தளித்தார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண பொருட்களை வழங்குவதற்கு வருகை தந்திருந்ததாகவும் அவர் இதன் போது தெரிவித்தார்.

அதிகளமான மலையக மக்கள் வாழும் கிளிநொச்சி மாவட்டம் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படும் என அமைச்சர் திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

அவர் பாரதிபுரம் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகளை வழங்கிய போது கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

வடக்கு- கிழக்கில் கூடுதல் அபிவிருத்திகளை முன்னெடுக்குமாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் பேசியுள்ளது.

அந்த அடிப்படையில்மலையக மக்கள் வாழும் கிளிநொச்சி மாவட்டம் தொடர்பில் தான் கூடுதல் கவனம் செலுத்தவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். (2-315)



**இலங்கை வயம்ப பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள், பட்டதாரிகள் ஆகியோர் இணைந்து வெள்ளப் பாதிப்புகள் ஏற்பட்டுள்ள கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிளி/கல்லாறு தமிழ் வித்தியாலய முகாமில் தங்க வைக்கப்பட்ட மாணவர்கள் 150 பேரிற்கு அப்பியாச புத்தகங்கள் அடங்கலாக பாடசாலை புத்தகப்பைகள் நேற்று முன்தினம் வழங்கியிருந்தனர்.**

# தமிழருக்கு ஒரு விடிவெள்ளி

ஈழத்திலே தோன்றித் தமது பதிப்புப் பணிகளாலும் ஆய்வு நோக்காலும் கவித்துவத்தாலும் நூலாசிரியத் தகைமையாலும் கடல் கடந்து தமிழகத்திலும் தம் புகழ் நிறுவிய பேரறிஞர் சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்கள். இது பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்களின் பதிவாகும். இன்று சி.வை.தா.எனச் சிறப்புப் பெயருடன் விளங்கும் சி.வை. தாமோதரப்பிள்ளையின் நினைவு நாளாகும். அவரை இன்றைய தமிழ்த் தலைமுறைக்கு அறிமுகம் செய்ய வேண்டியது எனது கடமையாகும்.

சி.வை.தாமோதரம் பிள்ளை தமிழ் வளர்த்த தாமோதரனார் என அறிஞர் பாராட்டுப் பெற்றவர். யாழ்ப்பாணத்தில் சிறுப்பிட்டி என்னும் சிற்றூரிலே 1832 ஆம் ஆண்டு பிறந்தவர். தாய் பெருந்தேவியும் தந்தையும் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவர்கள். அதனால் சி.வை.தாவும் பிறப்பினால் கிறிஸ்தவரானார். தந்தையிடம் பெற்ற தொடக்கக் கல்வியும் தெல்லிப்பழையில் ஆங்கிலப் பள்ளியில் பெற்ற ஆங்கிலக் கல்வியும் அவருடைய அறிவுத் திறனின் அடித் தளங்களாக அமைந்தன. மேலும் தமிழ் இலக்கண இலக்கியங்களைச் சுன்னாகம் முத்துக்குமாரக் கவிராயரிடம் கற்ற போது அதுவே அவருக்குத் தமிழ் மொழியின் சிறப்பை நன்கு உணர்த்தியது.

அதன்பின்னர் உயர்கல்வியை வட்டுக்கோட்டை செமினறியில் பெற்றார். அங்கு அவர் கற்ற எட்டு ஆண்டுகள் அவருடைய ஆங்கில மொழிப் புலமைத் தேர்ச்சியை வளம்படுத்தியது. அங்கு பெற்ற கல்வி வளமே அவரை ஆசிரியப் பணிக்கு இட்டுச் சென்றது.



சி.வை.தாவை அவரது ஆசிரியரான கறோல் விசுவநாதபிள்ளை தமிழ்நாட்டுக்கு அழைத்துச் சென்றார். இந்தப் புலப்பெயர்வு சி.வை. தாவின் தமிழ்ப் பணிக்கு ஏற்ற களமாயிற்று. அங்கு அவர் சைவ சமயத்தையே தன் சமய வாழ்வாக்கினார்.

தமிழ் நாட்டிலே ''தினவர்த்தமானி'' என்ற பத்திரிகையிலே பணியாற்றும் வாய்ப்பும் அவருக்குக் கிடைத்தது. சிறிது காலத்திலே சென்னை இராசதானிக் கல்லூரியிலே தமிழ்ப் பண்டிதராகவும் பணி செய்யும் வாய்ப்பைப் பெற்றார். சென்னையிலே தொடங்கப் பெற்ற பல்கலைக்கழகத்திலே கற்று 1857 இல் B.A. தேர்வில் முதல் பிரிவில் முதலாவது பட்டதாரியானார். இக் கல்வித் தேர்ச்சியால் கள்ளிக்கோட்டை அரசினர் கல்லூரியிலே ஆசிரியரானார். 1870 B.L. பட்டத்தையும் அவர் பெற்றதால் வழக்கறிஞராகத் தன் பணியை மாற்றிக் கொண்டார்.

1887 இல் புதுக்கோட்டை சமஸ்தான நீதிபதியாக அவர் உயர் பதவியைப் பெற்றார்.

சி.வை.தாவின் புலப்பெயர்வு அவருடைய கல்வி உயர்ச்சிக்கும் தொழிலும்வாய்ப்பளித்தது. ஆனால் அவர் அந்த வாய்ப்பை மேலும் இன்னொரு சிறந்த பணிக்காகப் பயன்படுத்தினார். இதுவே அவரை இன்று தமிழருக்கு ஒரு விடி வெள்ளியாக இனம் காட்டுகிறது. தென்னகத்திலே அவர் வாழ்ந்த காலத்தில் அங்கு ஈழத்தைப் பற்றிய செய்திகள்பரவியிருந்தன. நாவலர் அங்கு சென்று ஆற்றிய தமிழ்ப் பணியும் பாராட்டைப் பெற்றிருந்தது. அக் காலச் சூழலும் சி.வை. தாவைத் தமிழ்ப் பணியிலே ஈடுபடத் தூண்டியது. தென்னகத்திலே 18 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலே சாமிநாததேசிகர், சிவஞான சுவாமிகள் காலம் வரை ஒரு நூற்றாண்டு காலமாகச் சங்க நூல்களையும் பௌத்த சமண காவியங்களையும் கற்கக் கூடாது என்ற வழக்கமே நிலவி வந்தது. இவர்களிடம் பயின்ற மாணவர்கள் இக் கொள்கையை ஏற்றுக் கொண்டது மட்டுமன்றிப் பின்பற்றியும் வந்தனர்.

சங்க நூல்களையும் மணிமேகலை, சிலப்பதிகாரம் முதலிய இலக்கிய நூல்களையும் மாணவர்களுக்கு கற்பித்தலை நிறுத்தி இருந்தனர். இதனால் 19 ஆம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியத்திலே மாமேதை என்றும் தலைசிறந்த தமிழாசிரியர் என்றும் புகழ் பெற்றிருந்த மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை கூட இந்நூல்களைத் தமது மாணாக்கர்களுக்குக் கற்பியாதிருந்தார்.

பின்னர் சங்க நூல்களைப் பற்றியும் பௌத்த சமண காவியங்களைப் பற்றியும் பிறர் அறியச் செய்தவர் சேலம் இராமசாமி முதலியார் ஆவார்.

இதனைப் பதிப்புலக மேதை எனப் பலராலும் போற்றப்படுகின்ற உ.வே. சாமிநாதையர் தான் எழுதிய ''என் சரித்திரம்'' என்னும் நூலில் பதிவு செய்துள்ளார். சேலம் இராமசாமி ஐயரே உ.வே. சாமிநாதையரை இப்பணியிலே ஈடுபடச் செய்தார்.

ஆனால் சி.வை.தா. நாவலருடன் நூற்பதிப்புப் பணியிலே ஈடுபட்டிருந்தமையால் அத்துறையிலே ஆர்வத்துடன் ஈடுபட்டார். நாவலர் பரிசோதித்துக் கொடுத்த சி.வை. தாவின் தொல்காப்பியம் சொல்லதிகாரப் பதிப்பு 1868 இல் வெளி வந்தது. இப்பதிப்பு தென் னகத்திலே சி.வை.தாவைப் புலம் பெயர்ந்து வாழும் தமிழராக இனங் காண வைத்தது.

மேலும் அவர் மடங்களிலே முடங்கிக் கிடந்த பழைய ஏட்டுச் சுவடிகளாக இருந்த நூல்களை எல்லோரும் படிக்க வேண்டும் என எண்ணினார். அதன்மூலம் தமிழ் இலக்கணமும் இலக்கியமும் பேணப்படும் என நம்பினார். செவ்வியல் இலக்கியத்தை நூலாக வெளியிடும் பணியில் சி.வை.தா. ஒரு விடிவெள்ளியாக விளங்கினார் என்றால் மிகையாகாது.

1887 ஆம் ஆண்டு ''கலித்தொகை'' என்னும் செவ்வியல் இலக்கியத்தை நூலாகப் பதிப்பித்து வெளியிட்டார். அப்போது அவர் தென்னகத்திலே நீதிபதியாக இருந்தமையால் பதிப்பு முயற்சிக்கு உரிய பொருள் வளத்தையும் கொண்டிருந்தார். அ.சேனவிய சாஸ்திரியும் இப்பதிப்புக்குச் சி.வை.தாவுக்குப் பண உதவி செய்துள்ளார். இவருடைய கலித்தொகைப் பதிப்பே பின் வந்த கலித் தொகைப் பதிப்புகளுக்கெல்லாம் வழிகாட்டியாக அமைந்தது.

19 ஆம் நூற்றாண்டில் பதிப்பாசிரியர்கள் பலர் தோன்றித் தமிழ் நூல்கள் அழிந்து போகாமல் உயிர் பெறச் செய்தனர். அவர்கள் ஏட்டுப் பிரதிகளிலே இருந்த நூல்களைப் பதிப்பித்திருக்காவிட்டால் இன்று பழைய இலக்கிய இலக்கண நூல்களை நாம் எமது கண்ணால் பார்த்திருக்க முடியாது. ஏனெனில் ஒரு நூலின் சில பிரதிகளே தமிழ் நாடு முழுவதும் இருந்தன.

அதிலும் சிறந்த இலக்கியங்களின் பிரதிகள் மிகக் குறைவாகவே இருந்தன. அவையும் பழையனவாகி அழிந்து போகும் நிலையில் இருந்தன. அவற்றைப் புதிய ஏடுகளிலேமறுபடியும்பிரதிபண்ணி வைக்காத காரணத்தால் பல நூல்கள் அழிந்தும் போயின. ஏட்டுப் பிரதிகளின் நிலைகளைச் சி.வை. தா. தனது கலித் தொகைப் பதிப்பின் முன்னுரையிலே விரிவாக எழுதியுள்ளார்.

சி.வை.தாவின் பண்டைய இலக்கியப் பதிப்புப் பணியைப் பலர் தொடர்ந்தமையால் இன்று அவை நூல்களாக எமக்குக் கிடைத்துள்ளன. தமிழ்மொழி ஒரு "செம்மொழி'' என வையகம் அறியப் பண்டைய தமிழ் இலக்கியங்களே சான்றாக அமைந்தன. எனவே அந்த இலக்கியப் புதையலின் வழித்தடத்தைத் தமிழருக்குக் காட்டிய சி.வை.தா. இன்று தலைமுறையினருக்கு அறிமுகம் செய்யப்பட வேண்டியவர். தமிழ்த் தலைமுறையின் வழிகாட்டியான அவரை அவர் மறைந்த நாளிலே நினைவு கூர வேண்டியது இன்றியமையாதது. சங்க இலக்கியங்களைப் படிக்க இன்றைய இளந்தலைமுறையை நாம் ஊக்க வேண்டும். பண்டைய இலக்கியங்களை அறிமுகம் செய்யப் பல பயிலரங்குகளை அவர்களுக்கு ஒழுங்கு செய்து பயிற்ற வேண்டும். இப் பணியே தமிழ் தந்த தாமோதரனாருக்கு நாம் செய்ய வேண்டிய நன்றிக் கடனாகும்.

**முனைவர்**
**மனோன்மணி**
**சண்முகதாஸ்**

# வீதியில் புதைந்தது பேருந்து பீதியில் அலறிய மாணவர்கள்

## காட்டுப்புலம் பகுதியில் அவலம்





(யாழ்ப்பாணம்)

காட்டுப்புலம் - பாண்டவெட்டையிலிருந்து பல மாணவர்களுடன் சென்ற பேருந்து ஒன்று வீதியோரமாக வயலுக்குள் புதைந்ததில் மாணவர்கள் பெரும் பீதிக்குள்ளாகினர். அச்சத்தால் அலறிய அவர்கள் எதுவித சேதங்களும் இன்றி மீட்டெடுக்கப்பட்டனர்.

புதைந்திருந்த வாகனத்தை வெளியே எடுப்பதற்கு அதிகளவான இளைஞர்கள் கடும் பிரயத்தனத்தில் ஈடுபட்ட போதிலும் மூன்றரை மணிநேரத்தின் பின்னரே வாகனம் எடுக்கப்பட்டது.

குறித்த வீதியை புனரமைப்பதில் அரச அதிகாரிகளும் அரசியல் வாதிகளும் தொடர்ந்தும் அசமந்தப் போக்கினைக் கடைப்பிடித்து வருகின்றனர் என அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

சுழிபுரத்திலுள்ள வெண்கரம் வள நிலையத்தில் மாணவர்களுக்கான வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதற்காக அராலி, பொன்னாலை, பாண்டவெட்டை - காட்டுப்புலம் பிரதேசங்களிலுள்ள வெண்கரம் படிப்பகங்களில் கல்வி பயிலும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் குறித்த பேருந்தில் ஏற்றிவரப்பட்டனர்.

பேருந்து பாண்டவெட்டையிலிருந்து சுழிபுரம் நோக்கி வந்துகொண்டிருந்தபோது வீதியால் சென்ற மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கு வழிவிட முற்பட்டபோது வீதியோரமாக - வயலுக்குள் - சரிந்து புதைந்தது. வீதியோரமாக இருந்து பெரிய கல் ஒன்றுடன் வாகனத்தின் அடிப்பகுதி தொடுகையுற்றதால் வாகனம் வயலுக்குள் குடை சாயும் நிலையில் இருந்து தப்பித்துக்கொண்டது.

இதன்போது மாணவர்கள் பெரும் பீதிக்குள்ளாகினர். எனினும், அவர்கள் வயலுக்கூடாக இறக்கப்பட்டு பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர். பின்னர் அங்கிருந்து நடந்து சுழிபுரம் வெண்கரம் வள நிலையத்திற்கு கூட்டிச்செல்லப்பட்டனர். மாணவர்களுடன் சென்ற பேருந்து விபத்துக்குள்ளாகியதைக் கேள்வியுற்ற பெற்றோர் அச்சமடைந்தவர்களாக அவ்விடத்தில் ஒன்றுகூடினர். எனினும் நிலைமை சுமுகமாக்கப்பட்டது.

சுழிபுரத்திலிருந்து வயற் பகுதிக்கூடாக பாண்டவெட்டை - காட்டுப்புலம் என்ற இரட்டைக் கிராமங்களுக்குச் செல்லும் ஒரு கிலோ மீற்றர் நீளமான மேற்படி வீதி மிக மோசமாகச் சேதமடைந்துள்ளது.

மிகவும் ஒடுங்கிய நிலையில் காணப்படும் இந்த வீதியூடாகச் செல்லும் வாகனங்கள் அடிக்கடி தடம்புரள்வதும் சேதமடைவதுமாக உள்ளன. அடிக்கடி ஏற்படும் விபத்துக்களால் பலர் காயமடைந்துள்ளனர்.

இப்பிரதேசத்தில் நோய்களுக்கு உள்ளாவோரை இவ்வீதியூடாக விரைவாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. இந்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு பிரதேச மக்கள் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

எனினும், அரச அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் தொடர்ந்தும் பாராமுகமாக இருந்து வருகின்றனர் என அந்தப் பகுதி மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இவ்வீதியைத் திருத்துமாறு அப்பிரதேசத்தைச் சேர்ந்த பிரதேச சபை உறுப்பினர் எஸ்.கிருஸ்ணராசா வலி.மேற்கு பிரதேச சபையில் கொண்டுவந்த பிரேரணை நிறைவேற்றப்பட்ட போதிலும் அது கிடப்பில் போடப்பட்டுள்ளதாக அவர் கவலை வெளியிட்டார். (இ-9)

## மது போதையில் வாகனம் செலுத்திய 122 பேர் கைது

(அநுராதபுரம்)

அநுராதபுர மாவட்ட பொலிஸ் வலயத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கைகளின் போது 122 பேர்கைது செய்யப்பட்டுள்ளனர்.

மது போதையில் வாகனம் செலுத்திய 122 சாரதிகளே கைது செய்யப்பட்டுள்ளதாக அநுராதபுர வலய போக்குவரத்துப் பிரிவின் பொறுப்பதிகாரி, உப பொலிஸ் பரிசோதகர் கே.கருணாரத்ன நேற்று தெரிவித்துள்ளார்.

பண்டிகைக்காலம் மற்றும் ஆண்டின் இறுதிப் பகுதிகளை முன்னிட்டு வலயத்தின் 23 பொலிஸ் நிலையங்களை மையப்படுத்தி, கடந்த 20 ஆம் திகதியிலிருந்து விசேட சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்நிலையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அதிகமானவர்கள் கல்னேவ, தமுத்தேகம மற்றும் கெப்பிட்டிக்கொல்லாவ ஆகிய பொலிஸ் பிரிவுகளிலேயே கைது செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

கைது செய்யப்பட்ட நபர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக பொலிஸ் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.(இ-7)

# புத்தாண்டு சிறப்பு மலர் - 2019

HAPPY 2019 NEWYEAR



## நல்லை ஆதீனத்தின் அருளாசிச் செய்தி

இன்று புதுவருடம் பிறந்திருக்கிறது. இந்த வருடம் முதலாவது ஈழம் வாழ் மக்கள் எல்லோரும் சீரோடும் சிறப்போடும் மங்கல நல்வாழ்வில் திளைத்து நன்மைகள் பெருகி மன மகிழ்ச்சியுடன் வாழ வழிபிறக்க வேண்டும்.

எல்லோரும் நல்ல மனதுடன் பரந்த நோக்கோடு சந்தோஷமும் சமாதானமும் நிறைந்த நல்வாழ்வில் ஆனந்த கோலாகல மகிழ்ச்சியோடு வாழ வேண்டுமென்று எல்லாம் வல்ல நல்லைக் கந்தப் பெருமானை உளமாரப் பிரார்த்தித்து அருளாசிகள் நல்கி மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

இது ஆங்கில வருடப் பிறப்பு. ஆதலால் அனைத்து மக்களுமே ஆனந்தமயமான சுபீட்சம் நிறைந்த மங்கல நல்வாழ்க்கை அமைந்து துன்பம் விலகி இன்பம் பெருகி "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதற்கிணங்க உள்ளத்தில் சாந்தி நிலவி அமைதியான ஆனந்த வாழ்க்கை வாழ வேண்டுமென்று நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து அருளாசி வழங்கி மனமார வாழ்த்தி மகிழ்கின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

**ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், ஆதீன குருமுதல்வர் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்.**



## புத்தாண்டில் நலமும் வளமும் பெருகட்டும்

இன்று 2018 ஆம் ஆண்டு முடிவடைந்து 2019 ஆம் ஆண்டு உதயமாகின்றது. முடிவடைந்த ஆண்டு சோதனைகளும் வேதனைகளும் நிறைந்த ஆண்டாக பரிணமித்தது. அரசியல் குழப்பங்கள் என்றும் இல்லாத வகையில் அரங்கேறி இருந்தது. ஒவ்வொரு ஆண்டும் பிறக்கும் பொழுது கடந்த ஆண்டில் நடைபெற்ற சம்பவங்கள் எல்லாம் பிறக்கப்போகும் புதிய ஆண்டில் நடக்கக் கூடாது என்று நினைக்கின்றோம். ஆனால் திரும்பத் திரும்ப அதே துன்பங்களையும் துயரங்களையும் அனுபவிக்கின்றோம்.

எனவே பிறக்கப் போகும் புதிய ஆண்டில் அனைவருக்கும் நலமும் வளமும் பெருக எல்லாம்வல்ல அன்னை முத்துமாரி தாயை இறைஞ்சி வேண்டிப் பிரார்த்தித்து எனது நல்லாசிகளையும் தெரிவித்து அமைகின்றேன்.

சர்வே ஜனகா சுகினோ பவந்து

**சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணிக தேசிகர் (JP)**
**இந்துமத குருபீடாதிபதி பிரதம குரு, வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம், வல்வெட்டித்துறை.**

## சாந்தி தர வருக!

புவி வாழும் பூமாதேவியை
புகழாரம் சூட்டி மகிழ
புதுப்புது அர்த்தம் தர
வருகின்றதே புத்தாண்டு
மங்களம் பொங்கி வழிய
சுமங்கலியர் பூச் சூடி மகிழ
அமர்க்களமாய் வாராயோ
சிறப்புறு பல தரும் புத்தாண்டே!

வந்தாலும் வந்தாய்
தந்தாலும் தந்தாய்
புதிய எண்ணங்களின் வண்ணங்களையும்
புதிய முயற்சிகளின் தன்னம்பிகைகளையும்

தீதகற்றி நன்மைகள் செய்து
நலமாய் வாழ்ந்து மகிழ
நல்லோர் மனம் ஒன்றித்து
சமாதானம் சாந்தி பெற்றே வாழ
நாம் வரவேற்கிறோம் உன்னை!

**ஜாயிஷா அப்ரார்**
**சோனக தெரு, யாழ்ப்பாணம்.**






## சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் ஆசிகள்

2018 ஆம் ஆண்டில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகள், இயற்கை அனர்த்தங்கள் இவற்றில் இருந்து மலரும் 2019 இல் நாங்கள் காலடி எடுத்து வைக்கின் றோம். 2019 புதிய வருடத்தில் சகல இன மக்களும் எதிர்பார்க்கும் அரசியல் தீர்வு கிடைக்கவும் இயற்கை அனர்த்த பாதிப்புக்களினால் பாதிக்கப்பட்ட மக்கள் நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் வாழவும் சாந்தியுடனும் சமாதானத்துடனும் நாடு புத்துயிர்ப்புடன் இருக்கவும் இறைவனை இன, மத, மொழி வேறுபாடு இன்றி பிரார்த்தனை செய்வோமாக!

இக் காலகட்டத்தில் இறைவழிபாடுகள் மூலம் நன்மைகள் கிடைக்கும் என அனைத்து இன மக்களுக்கும் நல் ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள் கின்றோம்.

**சிவஸ்ரீ பா.மனோகரக் குருக்கள்,**
**தலைவர், சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்.**



## மக்கள் துயர் துடைக்கும் ஆண்டாக மலரட்டும். டக்ளஸ் தேவானந்தா வாழ்த்து

இழப்புக்களிலிருந்து எழுவதற்கும், துயரங்களிலிருந்து மீள்வதற்கும் ஒவ்வொரு வருடமும் பிறக்கும் புத்தாண்டிலாவது புது வழிவகை பிறக்கும் என்றுதான் தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். அந்த எதிர்பார்ப்புகளை நிறைவேற்றி அவர்களை எதிர்காலம் மீதான நம்பிக்கையுடன் வாழவைக்கவேண்டும் என்றுதான் நாமும் ஓய்வின்றி உழைக்கின்றோம் என்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள புதுவருட வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.


அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது, அரசியல் சதிகாரர்களின் சதியாலும், எமது பயணத்திற்கு முட்டுக்கட்டைபோடும் மக்கள் விரோதிகளாலும் தமிழ் மக்களின் நம்பிக்கைகள் தொடர்ந்து சிதறடிக்கப்பட்டு வருகின்றன.

பொங்கலுக்குத் தீர்வு, தீபாவளிக்குத் தீர்வு என்று கூறிக்கொண்டே தமிழ் மக்களை வீதிகளில் நிறுத்தியவர்களாலேயே, தமிழ் மக்களின் இழப்புக்களும், துயரங்களும் தீர்க்கப்படாத தொடர்கதையாகத் தொடர்கின்றது.

தமது சுயலாபங்களுக்காக தமிழ் மக்களின் உரிமைகளையும், உரித்தான நலன்களையும் பகடைக்காயாக பயன்படுத்தி தரகு அரசியல் செய்து வருவோரை நிராகரித்து, ஒரு விநாடி கிடைத்தாலும் அதை தமிழ் மக்களின் நலனுக்காகவும், தமிழர் நிலத்தின் மீள் எழுச்சிக்காகவும் பயன்படுத்துவோம் என்று மக்கள் சேவை செய்துவரும் எமது கரங்களை பலப்படுத்தி எதிர்காலச் சவால்களை வெற்றி கொள்வோம் என்பதே புதுவருடத்தில் எமது மக்களின் குறிக்கோளாக இருக்கவேண்டும்.

ஒவ்வொரு வருடத்திலும் நம்பிக்கையையும், எதிர்பார்ப்பையும் மட்டும் சுமந்திருந்தால் போதாது, அதை வெற்றிகொள்ளும் புதியபாதையும் அவசியமாகும்.

போலியாக தமிழ்த் தேசியம் பேசுவோரை நிராகரித்து, நடைமுறைச்சாத்தியமானதென நாம் காட்டும் புதிய பாதையில் தமிழ் மக்கள் மேலும் அணிதிரண்டு எமது கரங்களைப் பலப்படுத்தினால், மலரும் புத்தாண்டானது, எமது மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் ஆண்டாகவும், துயரங்களை துடைத்தெறிகின்ற ஆண்டாகவும், தீர்வில்லாமல் தொடரும் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளை பெற்றுக்கொள்கின்ற ஆண்டாகவும் அமையும் என்று நம்புகின்றேன் என்றும் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தனது புதுவருட வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.



## அரசியல் தீர்வு பெறும் ஆண்டாக மலரட்டும்

2019 ஆவது புத்தாண்டில் காலடி பதிக்கும் வேளை அனைவருக்கும் இறையாசீர் மிக்க புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகிறோம்.

கடந்த 2018 ஆவது ஆண்டு முழுவதும் பல இன்ப துன்ப அனுபவங்கள் ஊடாகவும் வழி நடத்திய இறைவனுக்கு நன்றி கூறுவோம். புதிய 2019 ஆவது ஆண்டையும் அருகில் நின்று வழி நடத்த இறையாசீர் வேண்டுவோம்.வழமைபோல் 2019 ஆவது ஆண்டின் முதல் புத்தாண்டு தினத்தை கத்தோலிக்க திருச்சபை அன்னை மரியா இறைவனின் தாய்க்கு அர்ப்பணிக்கப்பட்ட தினமாக பிரகடனப்படுத்தியுள்ளது.

அன்னை மரியா இறைவனின் தாயை அனைவரும் தமது அன்புத் தாயாக ஏற்று அவவின் பாதுகாவலில் 2019 ஆம் ஆண்டு முழுவதையும் நடந்து கடக்க வேண்டும் என்பதே கத்தோலிக்க திருச்சபையின் விருப்பமாகும்.


அன்னை மரியா இறைவனின் தாயை அனைவரும் தமது அன்புத் தாயாக ஏற்று 2019 ஆம் ஆண்டு முழுவதும் அவவின் பாதுகாவலில் அனைத்து இன்ப, துன்ப அனுபவங்களில் வாழ வேண்டும் என்பதே எமது விருப்பமுமாகும். பல இந்து சமய அன்பர்கள் அன்னை மரியா இறைவனின் தாயை தமது அன்புத் தாயாக ஏற்று மதிப்பளித்து வருவது அனைவரும் அறிந்த இங்கு குறிப்பிடப்பட வேண்டிய உண்மையாகும்.

இறைவனின் தாயாகும் அழைப்பை பெற்றபோது உமது வார்த்தையின் படியே எனக்காகட்டும் என்ற வார்த்தைகளை இறை திட்டத்திற்கு தன்னை அர்ப் பணிக்கும் வார்த்தைகளாக்கினார் இறைவனின் தாயான அன்னை மரியா. அன்னை மரியா தன் வாழ்வில் சந்தித்த இன்ப,துன்ப அனுபவங்களின் போதெல்லாம் இந்த உமது வார்த்தையின் படியே எனக்காகட்டும் என்ற அந்த அர்ப்பண வார்த்தைகளையே தன் உள்ளத்தில் மௌன மாக அசை போட்டு தன் இன்ப,துன்ப அனுபவங்களை கடந்தார்.

இயேசுவைப் பெற்றெடுத்த இன்பமான அனுபவத்தின் போதும் இறந்த இயேசுவை மடியில் கிடத்திய துன்பமான அனுபவத்தின் போதும் உமது வார்த்தையின் படியே எனக்காகட்டும் என்ற தனது அர்ப்பண வார்த்தைகளை தமது மனதில் மௌனமாக அசைபோட்டு இறை திட்டத்தை ஏற்று பணிந்தார் இறைவனின் தாயான அன்னை மரியா.பிறக்கும் 2019 ஆம் ஆண்டும் பல இன்ப,துன்ப அனுபவங்களை எமக்கு தர இருக்கிறது. இந்த இன்ப. துன்ப அனுபவங்களில் இறைவனின் தாய் அன்னை மரியா போன்று உமது வார்த்தையின் படியே எனக்கா கட் டும் என்ற அன்னை மரியாவின் வார்த்தைகளை எமதாக்கி இறை திட்டத்தை ஏற்று வாழ அழைப்பு விடுக்கிறோம்.

2019 ஆவது ஆண்டு தமிழ் மக்கள் அனைவருக்கும் இறையாசீர் மிக்க ஆண்டாகட்டும். தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவு செய்யும் ஆண்டாகட்டும். நீதியோடு கூடிய நிரந்தர அரசியல் தீர்வை தமிழ் மக்கள் பெற வழி வகுக்கும் ஆண்டாகட்டும் என ஆசித்து மீண்டும் இறையாசீர் மிக்க புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

மேதகு கலாநிதி யஸ்ரீன்
பேணாட் ஞானப்பிரகாசம். யாழ்.ஆயர்.



## நம்பிக்கையில் மலரும் புத்தாண்டாய் மலர்க

இல்லங்கள் எங்கும் இன் புற்று மகிழ இளையோர் நற் செயல்கள் சமூகத்தில் சிறக்க இறை ஆசீர் நிறைவாய் கிட்டும் புத்தாண்டாய் மலர நம்பிக்கையில் மலரும் புத்தாண்டே வருக.

துன்பங்கள், துயரங்கள் களைந்திடும் ஆண்டாய் தூய பணிகளில் இணைந்திடும் சமூகமாய் பொய்மைகள், போலிகள் அகன்றிடும் ஆண்டாய் நன்மைகள் பெருகிட நல்லாண்டே வருக.வன்முறை, வன்சொற்கள் மறைந்திடும் ஆண்டில் வளமான வாழ்வளிக்கும் தலைமகள் தோன்ற இளைமகள் பொறுப்புக்கள் ஏற்றிடும் ஆண்டாய் சவால்களை வென்று சாதிக்கும் புத்தாண்டே வருக.

துன்புறும் மக்களின் துயர் நீங்கும் ஆண்டாய், ஆன்மீக பற்றுறுதியில் அன்பினை பகிரும் ஆண்டாய், அரசியல் குரோதங்கள் அகன்றிடும் ஆண்டாய், அறிவியல், ஆன்மீகம் அன்பினால் நிறைந்திடும் ஆண்டாய், நட்புடன் நல்லுறவால் நல்லாட்சி மலரும் ஆண்டாய், நானிலம் எங்கும் நல்விளைச்சல் பெருகிடும் ஆண்டாய் நயவஞ்சகம், சூது, போதைகள் அகன்றிடும் ஆண்டாய், நல் ஆட்சி மலரும் நம்பிக்கை ஆண்டாய் மலர நல்வாழ்த்துக்கள் கூறும் நல் ஆண்டாய் மலர்க.

**செ.யோசப்பாலா உள சமூகச் சீராளன்**

# புத்தாண்டு சிறப்பு மலர் - 2019


SVM

Happy New Year

2019

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

S.V.முருகேசு

இல.154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P : 021 222 8899



பிரான்சிஸ் றேடேஸ்

Francis Traders

மீன்பிடி உபகரணங்கள், யமகா அவுட் மோட்டார் அதன் உதிரிப்பாகங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.




இல.133/8, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்

No.133/8, K.K.S.Road, Jaffna.

Proprietor : V.Douglas Paul 077 758 8224

T.P : 021 222 8392 / 077 758 8224

E-mail : francestraders.dl33@gmail.com



ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

Rube Since 1982 Jewellery



நம்பிக்கை, கைராசி மற்றும் தரம்குன்றா

தங்கநகை உலகில் 35 வருடம் அனுபவம் வாய்ந்த நாங்கள் உலகின் பல பாகங்களிலும் இருக்கும் எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையினை வழங்கிக் கொண்டிருக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ரூபி ஜுவல்லறி




2019 Happy New Year

சிங்கப்பூர் தரத்திலான தங்க நகைகளை உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்

எமக்கு யாழ் நகரிலே, இலங்கையில் எப்பாகத்திலோ வேறு எந்தக் கிளைகளும் கிடையாது என்பதை வாடிக்கையாளர் களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம்.

எம்மிடம் கடன் அட்டைகள் மூலம் கொள்வனவு செய்யும் வசதியும் உண்டு.

இல.227-229, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

T.P : 021 221 6919, 0777 344 074





LAKELAND INTER AMERICAN SCHOOL JAFFNA

ADMISSIONS ARE OPEN FOR MONTESSORI (AMI METHOD) ENGLISH MEDIUM

HURRY TO REGISTER AGE GROUPS 2 1/2 YEARS TO 5 1/2 YEARS

எமது கற்பித்தல் முறைமையானது (AMI METHOD) இல் ஆங்கில மொழி மூலம் (ENGLISH MEDIUM), கருவிகள், உபகரணங்கள் கொண்டு காட்சிப்படுத்தி (APPARATUS) பிள்ளைகளின் திறமைகளை வெளிக்கொணர்வதன் மூலம் சிறார்களின் ஆரோக்கியமான எதிர்காலத்திற்கு ஏற்ற சூழலை உரு வாக்குதல் ஆகும்.

2 1/2 வயது தொடக்கம் 5 1/2 வயது வரையுள்ள குழந்தைகள் எமது பாட சாலைக்கு உள்வாங்கப் படுவார்கள். ஆர்வமுள்ள பெற்றோர்களிடமிருந்து விண் ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**OUR VISION**

To become a model school which transforms personalities into academically sound, physically healthy, Multi skilled individuals with good human values to be responsible future leaders of the global community.

**OBJECTIVES**

To create an opportunity- filled environment conducive to the child to explore the environment at his/ her own capacity and carve his/ her niche in today's world.

To provide enriching strategies that would encourage students to be goal-oriented and to be self- managers.

To empower the student to succeed in today's dynamic world by integrating general education and other practical skills, thereby providing a TOTAL educaion, satiating the need of the intellect, the body and the soul.

CONTACT OUR OFFICE FOR APPLICATION FORM AND FURTHER DETAILS

154 , BROWN ROAD, JAFFNA.

TEL: 021 222 6242, HOT LINE: 077 244 4172

# புத்தாண்டு சிறப்பு மலர் - 2019


## க.செ.கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்

76, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

ஆயுர்வேத மருந்து சரக்கு, கோவில் அபிஷேக பொருட்கள், எண்ணெய் வகைகள், வாசனைத் திரவியங்கள், கும்பாபிஷேக பொருட்கள், சங்காபிஷேகப் பொருட்கள் போன்றவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.



தொ.பே : 021 222 2912



## அருள்நாயகி புத்தகசாலை



Arul Nayaki
A9 Road,
Bus Stand,
Kodikamam.
T.P :
077 493 7585

# கிருபா லேணர்ஸ்
# KIRUBAA LEARNERS

- ஆண், பெண் இருபாலாருக்கும் (AUTO GEAR AND MANUAL) வாகனப் பயிற்சி.
- பெண்களுக்கு நவீன காரில் பெண் பயிற்சியாளர்களால் பயிற்சி.
- விசேட வீடியோ வகுப்புக்கள்.
- விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- தவணை முறைக் கட்டண வசதி.
- விரும்பிய நேரத்தை தெரிவு செய்யும் வசதி.
- இரவு நேர வாகனப் பயிற்சி.
- அனுபவம் வாய்ந்த பயிற்சியாளர்களால் மும்மொழிகளிலும் பயிற்சி.



**DS-589 அரச அங்கீகாரம் பெற்ற (A) தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை**

**இல.226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**021 222 4353, 071 454 6960, 0777 22 5292**



| | | | | |
|---|---|---|---|---|
| A9 வீதி, கிளிநொச்சி, (கச்சேரி முன்பாக) 021 - 228 - 5505 071 - 454 - 6955 | இல.216, A9 வீதி, வவுனியா. (வசந்தி திரையரங்கு முன்பாக) 024 222 7777 | இல.227/6, கே.கே.எஸ்.வீதி,சுன்னாகம். (மதவடி அண்மையில்) 021-224-2022, 071-454-6956 | பிரதான வீதி, சித்தன்கேணி. 076 212 1299 021 225 2500 | கண்டி வீதி, சாவகச்சேரி. 021-227-0700 021-492-3202 |

# புத்தாண்டு சிறப்பு மலர் - 2019







# புத்தாண்டு சிறப்பு மலர் - 2019

HAPPY 2019 NEWYEAR


அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை

# சசிகா
## லேணர்ஸ்

DS No - 882

முறைமையான சாரத்தியத்தைக் கற்றுக்கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்

தலைமை காரியாலயம்
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். Hotline - 077 722 6247
021 221 7678, 077 614 0361

THE SASIKA LEARNERS

வாகன விபத்தைத் தவிர்ப்போம்
உயிர்களைக் காப்போம்.



புதிய கிளை :
கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு.
தொ.பே. : 021 225 2333 / 071 255 4135

கிளை நிறுவனங்கள் :
மல்லாகம் : K.K.S வீதி , மல்லாகம்.
021 224 3393 / 070 301 3014
வேலணை : வங்களாவடிச் சந்தி, வேலணை.
021 221 5472 / 070 301 3012
சங்கானை : ஓடக்கரை வீதி, சங்கானை.
021 225 1664 / 070 301 3016

SasikaLearners
sasikadrivingschool@gmail.com

821 C, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 222 8004



## மலாயன் கபே



64 வருட கால யாழ். மக்களின் பாரம்பரியம் மிக்க ஒரே சைவ உணவகம்

சுத்தத்தின் செல்வனென்று மக்களால் மகுடம் சூடப்பட்ட ஒரே ஒரு சைவ உணவகம்

குறை இருந்தால் எம்மிடம் கூறுங்கள் நிறை இருந்தால் நண்பரிடம் கூறுங்கள்

021 222 2373
இல.36,38, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

www.malayancafe.com



# சதாபொன்ஸ்
## கல்வி நிலையம்

ஆரம்பம் 1963
SADHAPONS EDUCATION CENTRE

மாலுசந்தி, அல்வாய்



- தரம் 5 புலமைப்பரிசில் வகுப்புக்கள் பயிற்றப்பட்ட ஆசிரியரின் வழிகாட்டலில்
- உயர்தரம் வரையான வகுப்புக்கள்
- A/L கலை, வர்த்தக வகுப்புக்கள் நடைபெறுகின்றன.



தொடர்புகளுக்கு :
021 226 3206 / 077 309 5176
- இயக்குநர்



அனைவருக்கும்

# ஆபரண அழகி
# அகிலா நகைமாடம்

நவீனநகைகளின்

# புதிய நவீனா
# நகையகம்

2019 இனிய புதுவருட வாழ்த்துக்களை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றனர்.



# அகிலா
## நகைமாடம்

காக்காகடைச்சந்தி,
கிளிநொச்சி, யாழ்ப்பாணம்.
021 228 3559, 076 349 0023

# புதிய நவீனா
## நகையகம்

இல.191, கஸ்தூரியார் வீதி.
021 222 7114, 077 711 5625

# புத்தாண்டு சிறப்பு மலர் - 2019

HAPPY 2019 NEWYEAR

## IIS

23 வருட கால அனுபவம்

எதிர்காலத்தை உங்களுடையதாக்குங்கள்

Pearson

**HND**



- COMPUTING
- CIVIL ENGINEERING
- BUSINESS MANAGEMENT

**புதிய பிரிவுகள் ஆரம்பம் : 05.01.2019**

- உயர்கல்விக்கே உரித்தான வளாகம்
- மூன்றாம் நிலைக்கல்வி, தொழில்கல்வி ஆணைக்குழுவின் (TVEC) அங்கீகாரம்
- PEARSON பிரதிநிதிகளின் நேரடி வருகையும் கண்காணிப்பும்
- தொழில்சார் பயிற்சியுடனான கற்கைநெறி
- இலகுதவணை முறையிலான கட்டண` வசதி
- கல்விக்கேற்ற வேலைவாய்ப்பு வசதிகள்

IIS CITY CAMPUS

200, சிவன் பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 8060
iis@iis.edu.lk , info@iis.edu.lk

Hot line : 0777570038

## ஏகாம்பரம்

**புடைவை மாளிகை**

**A.EHAMPARAM**

Whole Sale & Retail
Dealers in Textiles




74(7), Grand Bazaar, Jaffna.

T.P : 021 222 2151
021 222 5938

74 (7), பெரியகடை, யாழ்ப்பாணம்.

## பிரேமரஞ்சன்

**பத்திரிகை முகவர்**



HAPPY 2019 NEWYEAR

கே.கே.எஸ்.றோட், இணுவில்.
தொ.பே. இல :077 346 3302

## ஜீவாகாரம்


குழந்தைகள் முதல்
முதியோர் வரை பாவிக்க
உகந்தது சத்துணவு




## Anna Coffee

*100% Pure Ground Coffee*

அன்னா கோப்பி




*Superbly Blended & Roasted to a Strict Formula....*

எமது புதிய தயாரிப்புக்கள்....




அண்ணா தொழிலகம் - இணுவில்.
TEL: 021 - 2241565,
021 7200800, 0112 - 436063

## அறிவுநதி போத்தகசாலை

**Arivunathy Book Shop**

Wholesale & Retail Dealers in All Kinds of Books, Stationeries, Office Equipments, Sports Items, Torphies, Gift Items & Toners, Cartridges

கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
Kanagapuram Rd,
Kilinochchi.
T.P/Fax - 021 228 5395 /
077 673 7535

மலிவு விற்பனை
எனும் மாயாஜால
விளம்பரங்களில்
ஏமாறாதீர்
கிளிநொச்சியில் நீடித்து நிலைத்து
நிற்கும் உழைக்கும் மக்களினதும்
மாணவர்களினதும் நன்னநம்பிக்கைக்
குரிய சமூகப் பொறுப்புமிக்க

**அறிவுநதி புத்தகசாலை**

அன்புடன் அழைக்கின்றது

'நிதானமான தீர்மானம்
ஏமாற்றத்தை
தவிர்க்கும்'

# புத்தாண்டு சிறப்பு மலர் - 2019

## பூரித்தெழு புத்தாண்டே வருக

மாந்தர் வாழ்வில் மாருதம் வீசும் மனதில் தோன்றும் மயக்கங்கள் நீங்கும்
பந்து சனங்கள் பகையின்றி வாழும் பக்குவ நிலையும் பரிவுடன் தோன்றும்
சந்ததம் வாழ்வில் சஞ்சலங்கள் நீங்கி சமுதாய வளர்ச்சி சீர்பெற் றோங்கும்
வருங்கால மக்கள் வனம்பெற் றோங்க
வளர்பிறை போலே நாம்பெற் றோங்கும்
சிந்திய எண்ணங்கள் சிறப்புற் றோங்க
சிரிக்கும் புத்தாண்டே விரைந்து வருவாய்

கலாபூஷணம் மு.தணிகாசலம் கற்கோவளம்.


ஸ்ரீ துர்க்கா மல்ரி சென்ரர்



கே.கே.எஸ். றோட், தெல்லிப்பழை
(யூனியன் கல்லூரிக்கு முன்பாக)
பத்திரிகைகள், சஞ்சிகைகள்,
பாடசாலை உபகரணங்கள்
பான்சி பொருட்கள், குளிர்பானம்
மற்றும் Photo பிரதி
Tel:077 362 8810

அருளம்மா ஸ்ரோர்ஸ்



பத்திரிகைகள், சஞ்சிகைகள்
மற்றும் உடு புடைவைகள்,
சமையல் எரிவாயு
வகை விற்பனையாளர்.
No.505, Beach Road,
Gurunagar, Jaffna.
T:P- 077 748 5295

SIVANANTHA CAFE



No.648, Point Pedro Road,
Nallur, Jaffna.
பத்திரிகைகள்,
சஞ்சிகைகள்
மற்றும்
சிற்றுண்டி,
தேநீர்.

சத்தியா பல்பொருள் வாணிபம்
அன் பான்சி ஹவுஸ்



சகல விதமான மளிகைப் பொருட்களையும் தரமாகவும்
மலிவாகவும் மிகவும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
அராலி வடக்கு, செட்டியார் மடம்.
தொ.பே. 077 087 35 89

கஜமுகன் பல்பொருள் வாணிபம்
KAJAMUGAN PALPORUL VANIPAM



பலசரக்குப் பொருள்,
பத்திரிகை, சஞ்சிகை
வைத்தியசாலை வீதி, மந்திகை.
தொ.பே. 077 918 0202

திருநீலகண்டன்
ஸ்ரோர்ஸ்



பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் பலசரக்குப்
பொருட்கள் விற்பனையாளர்
57, கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.

SHETHRABALAKA
BOOK SHOP
பத்திரிகைகள், சஞ்சிகைகள், பாடசாலை உபகரணங்கள், எழுது
கருவிகள், காகிதாதிகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள்.



Kandy Road, Kodikamam,
Tel: 077 220 8366

MAYOORA




Communication
பாடசாலை உபகரணங்கள், போட்டோ கொப்பி,
Printing, தொலைபேசி அட்டைகள் Reload
என்பன இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
TP / Fax:- 021 226 3209
Hot Line: 077 780 5338
Email: Mayooran5@yahoo.com
SkypeId: allaimayura.com
Allaiyampathi, Thunnalai, Karaveddy.

மணியம் ஸ்ரோர்ஸ்



MANIUM STORES
பத்திரிகைகள், சஞ்சிகைகள்,
பாடசாலை உபகரணங்கள் மற்றும்
காகிதாதிகள்
கண்டி வீதி, சாவகச்சேரி.
தொ.பே.இல. 077 902 4275



# பாலித்தீவு- பயணத்தின் அனுபவம்

12



சோ.நிக்கஜ்
அரியாலை.

நாங்கள் விடுதியை அடைந்த போது நாளைக்கு (ஏழாவது நாள்) ஒய்வு நாளாக அறிவித்துக் கொண்டோம். Kling king beach இற்கு இறங்கி ஏறிய அசதி அனைவரையும் போட்டுத் தள்ளியிருந்தது. மொத்த நாளையும் வீணாக்காது மதிய உணவுக்குப்பிறகு நாங்கள் தவறவிட்ட Padang Padang beach இல் மாலைப்பொழுதினை கழிக்கலாம் என முடிவு செய்தோம்.



அலையுடன் கூடிய கடல்

Padang Padang பாலியின் தெற்குப்பகுதியில் அமைந்திருக்கின்றது. அலைச்சறுக்கு செய்பவர்களால் பெரிதும் விரும்பப்படும் கடற்கரை மிகப்பெரிய முருகைக்கற்கள் சகிதம் பார்ப்பதற்கும் ஓய்வெடுப்பதற்கும் ஏற்ற இடமாகும். Kuta விலிருந்து செல்வதற்கு கிட்டத்தட்ட ஒரு மணிநேரத்திற்கு மேலாகும். இதனால் எந்தச் சாரதிகளும் குறைந்த கட்டணத்திற்கு வரமாட்டேன் என்றுவிட்டார்கள்.

தெருவில் taxi ஒன்றை ஒருவழிக்கு 150.000 IDR இற்கு பேரம் பேசி பிடித்துக்கொண்டோம். வெறும் வண்டியாய் திரும்பி வருவதற்கு எங்களை திருப்பி அழைத்து வருவதே பரவாயில்லை என நினைத்த அந்தச் சாரதி காத்திருந்து எங்களை மறுபடி இன்னுமொரு 150,000 IDR இற்கு விடுதி வரை அழைத்து வந்து விட்டார்.

பயணம் முடிவை நெருங்கி விட்டது. மிக முக்கியமான ஒரு விடயத்தைப்பற்றி



இயற்கையாக அமைந்த பாலம்

கூற மறந்துவிட்டேன். அது வெளிநாட்டுப்பணத்தை உள்ளூர்ப்பணமாக மாற்றுவது தொடர்பாகும். பணமாற்றத்திற்கு அங்கே ஏகப்பட்ட இடங்களைக் காணலாம்.

டெலிபோன் பூத் அளவில் பெட்டி பெட்டியை ஏகப்பட்ட கடைகள் உங்கள் வெளிநாட்டுப்பணத்திற்கு அதிக உள்ளூர்ப்பணம் தருவதாய் எழுதிப்போட்டிருப்பார்கள். சொற்ப பணம் அதிகமாய் கிடைக்கும் என்பதற்காக அங்கே போனீர்கள் தொலைந்தீர்கள். ஏற்கனவே அங்கே கணக்கு வழக்கு எல்லாம் இலட்சக் கணக்கில் தான் சிறு பெட்டியில் இருக்கும். பணப்பரிமாற்ற தரகர் உங்கள் கண் முன்னாலேயே தருவதற்கு சரியான பணத்தை எண்ணி தருவார்கள். எல்லாம் சரியாக இருப்பது போலத்தான் இருக்கும். வாங்கிக் கொண்டு போய் மறுபடி எண்ணிப்பார்த்தால் பாதிப்பணத்தை காணக்கிடைக்காது. அவர்கள் வித்தைக்காரர்கள். அவதானம்.

பணம் மாற்றும் போது கவனிக்க வேண்டியவை, அதிக தொகை கிடைக்கிறது என போகாதீர்கள், மாற்றிய பின் கிடைக்கப் போகும் பணத்தை முன்னரே கணக்கிட்டு கொள்ளுங்கள், பெரிய இடங்கள் மற்றும் கடைகளில் பணமாற்றம் செய்யுங்கள் (அவர்கள் பணமாற்றத்திற்கு பற்றுச்சீட்டு தருவார்கள் - அவர்களை நம்பலாம்)

(பயணம் தொடரும்)

## மத்திய கிழக்கு நாடுகளுக்கு மட்டும் கடவுச்சீட்டுக்கள் நேற்றுடன் நிறைவு

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளுக்கு மட்டும் பயணிக்க செல்லுபடியாகும் விதத்திலான கடவுச்சீட்டுக்களின் விநியோக நடவடிக்கைகள் நேற்றுடன் நிறைவுக்கு வருவதாகவும் இன்று முதல் அனைத்து நாடுகளுக்கும் பயணிப்பதற்கு உகந்த கடவுச்சீட்டுக்கள் மாத்திரமே விநியோகிக்கப்படுமெனவும் குடிவரவு, குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த காலங்களில் மத்திய கிழக்கு நாடுகளுக்கு மாத்திரம் பயணிக்கும் வகையில் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தால் விநியோகிப்பட்டு வந்த கடவுச்சீட்டுக்கள் மாத்திரமே விநியோகிப்படும்.

இன்று முதல் மத்திய கிழக்கு நாடுகளுக்கு மாத்திரம் பயணிக்கும் விதத்தில் விநியோகிக்கப்பட்டு வந்த கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட மாட்டாது.

மாறாக இன்று முதல் அனைத்து நாடுகளுக்கும் பயணிக்கும் விதத்திலான கடவுச்சீட்டுக்களே விநியோகிக்கப்படும். இந்த கடவுச்சீட்டினூடாக மத்திய் கிழக்கு நாடுகள் உள்ளிட்ட அனைத்து உலக நாடுகளுக்கும் பயணிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(இ-4)

## ஸ்மார்ட் தேசிய அடையாள அட்டை விநியோகம் ஜனவரியில் ஆரம்பம்

(கொழும்பு)

ஸ்மார்ட் தேசிய அடையாள அட்டையை விநியோகிக்கும் பணிகள் எதிர்வரும் 2019 ஆம் ஆண்டு முதலாம் திகதி செவ்வாய்க் கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்த அடையாள அட்டையை பரீட்சார்த்தமாக முன்னெடுக்கும் நடவடிக்கை மேல், சப்ரகமுவ மாகாணங்களில் வழங்கும் பணி கடந்த 17 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

குறித்த பரீட்சார்த்த நடவடிக்கை வெற்றியடைந்திருப்பதால் இந்த வேலைத் திட்டத்தை நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கவுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக்க தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

## சிறுவர் பாதுகாப்பு விழிப்புணர்வு



(கரணவாய்)

சிறுவர் பாதுகாப்பு விழிப்புணர்வை சமூகமட்டத்தில் ஏற்படுத்தும் முகமாக யாழ். வடமராட்சிப்பகுதியில் பொது மக்கள் ஒன்றுகூடல்கள் கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விழிப்புணர்வுச் செயற்பாடுகளை சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர், பொதுச் சுகாதார பரிசோதகர், கிராம உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், குடும்பநல உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர். (இ-60)

## உயிர் அச்சுறுத்தல் விடுத்து கப்பம் கோரியவர் கைது

(கிரிபத்கொட)

தொலைபேசி ஊடாக உயிர் அச்சுறுத்தல் விடுத்து 30 இலட்சம் ரூபாய் கப்பம் கோரிய நபரொருவர் கிரிபத்கொடையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பேலியகொடை பொலிஸாருக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் நேற்று முன்தினம்மாலை இவர்கைது செய்யப்பட்டுள்ளார். (இ-7)

## சித்தியடைந்தோர் வீதம் கடந்த வருடத்தைவிட இம்முறை அதிகரிப்பு!

(கொழும்பு)

கடந்த கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளுடன் ஒப்பிடுகையில் இம்முறை சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பி. சனத் பூஜித தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இம்முறை கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளைக் கவனத்திற்கொள்ளும் போது கடந்த வருடத்திலும் பார்க்க பௌதீக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம், பொறியியல் முதலான பாடங்களில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது.

இதேபோன்று, பல்கலைக்கழகங்களுக்குத் தகுதி பெற்றோரின் எண்ணிக்கை 64.68 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

கலை, வர்த்தகம் மற்றும் தொழில்நுட்ப கற்கை நெறிகளில் தூர இடங்களிலுள்ள மாணவர்கள் ஆகக்கூடுதலான பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர்.

பரீட்சையில் விசேட கண்காணிப்புக்குட்படுத்தப்பட்ட 19 மாணவர்களின் பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## கடற்படைத் தளபதியாக பியல் டிசில்வா நியமனம்



(கொழும்பு)

புதிய கடற்படைத் தளபதியாக ரியர் அட்மிரல் பியல் டிசில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இலங்கைக் கடற்படையின் 23 ஆவது தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளதுடன், இவருக்கான நியமனக் கடிதத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி செயலகத்தில் வைத்து வழங்கினார். (இ-7)

## சந்தைகளின் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 140 | 140 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 70 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 400 | 350 | 300 | 400 |
| தக்காளி | 150 | 140 | 110 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 40 | 40 |
| கோவா | 100 | 100 | 80 | 100 |
| கரட் | 120 | 140 | 110 | 200 |
| பூசணி | 50 | 30 | 30 | 60 |
| புடோல் | 100 | 80 | 70 | 100 |
| வாழைக்காய் | 80 | 70 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 140 | 160 | 130 | 160 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 80 | 100 |
| பாகற்காய் | 300 | 200 | 200 | 300 |
| வெண்டிக்காய் | 140 | 80 | 90 | 120 |
| கருணைக்கிழங்கு | 60 | 60 | 40 | 80 |
| பயற்றங்காய் | 150 | 160 | 150 | 200 |
| லீக்ஸ் | 180 | 160 | 170 | 200 |
| பீற்றூட் | 180 | 160 | 180 | 160 |
| கறிமிளகாய் | * 300 | 220 | 200 | 300 |
| முருங்கைக்காய் | — | 500 | — | 600 |
| போஞ்சி | 150 | 120 | 110 | 140 |
| கத்தரிதம்புள்ள | 120 | — | 70 | 100 |
| கீரை - 1பிடி | 50 | 50 | 40 | 60 |
| தேசிக்காய் | 300 | 200 | 140 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 40 | 30-50 |
| இராசவள்ளி | 180 | 140 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 400 | 300 | — | — |
| முள்ளங்கி | 60 | 100 | 30 | 120 |
| பொன்னாங்காணி | 50 | 50 | 20 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 15 | 30 |
| ஈரப்பலா | 60 | 50 | 110 | 60 |

# புத்தாண்டுப் பலன்கள் -2019



**எதிர்நீச்சல் போட்டு வாழ்வில் வெற்றியடையும் ரிஷப இராசி வாசகர்களே!**

பிறக்கப் போகும் புத்தாண்டு பெருமைகளைக் குவிக்கும் ஆண்டாக உங்களுக்கு அமையப் போகின்றது. வருடத் தொடக்கத்திலேயே குருவின் பரிபூரண பார்வை கிடைக்கின்றது. எனவே தடைகளும், தாமதங்களும் தானாகவே விலகும். முயற்சிகளில் வெற்றி பெற்று முன்னேற்றத்தின் முதற்படிக்கு செல்ல, சஞ்சரிக்கும் கிரகங்கள் சாதகமாக விளங்குகின்றன. இருப்பினும் 8இல் சனி இருக்கிறாரே, இன்னும் தொல்லைகள் அதிகரிக்குமோ என்று நீங்கள் நினைக்க வேண்டாம். ஆண்டின் தொடக்கத்தில் சனி அஸ்தமனம் பெறுகின்றார். அதன்பிறகு மே மாதம் முதல் வாரத்திலிருந்து செப்டெம்பர் 3ஆம் திகதி வரை வக்கிர இயக்கத்தில் இருக்கிறார். 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம்' என்பதற்கேற்ப கெடுபலன்கள் விலகி நற்பலன்கள் உங்களை நாடிவரப் போகின்றது.

புத ஆதித்ய யோகம், சுக்கிர மங்கள யோகம் போன்ற யோகங்களின் அமைப்போடு புத்தாண்டு தொடங்குவதால் உங்கள் எண்ணங்கள் யாவும் எளிதில் நிறைவேறும். தொழில் முன்னேற்றமும், தொகை வரவில் திருப்தியும், அழியாத புகழுக்கு அத்திபாரமும் அமைத்துக் கொடுக்கும் ஆண்டாக இந்தப் புத்தாண்டு அமையப் போகின் றது.

சப்தமாதிபதி இலாப ஸ்தானத்தில் இருப்பதால் வாழ்க்கைத் துணை வழியே நல்ல வாய்ப்புகளும், வருமானமும் கிடைக்க வழிபிறக்கப் போகின்றது. புத ஆதித்ய யோகம் இருப்பதால் படிப்பில் ஏற்பட்ட தடை அகலும். பாசம்மிக்க பிள்ளைகள் நம்மை விட்டுவிலகி சென்று விட்டார்களே, தங்கள் சொற்படி நடக்கவில்லையே என்று கவலைப்பட்டவர்கள் இப்பொழுது மகிழ்ச்சியடையும் விதத்தில் உங்கள் மனம்போல அவர்கள் நடந்து கொள்வர்.

சுக்கிரன் 6இல் சஞ்சரிப்பதால் எதிரிகள் உதிரிகளாவர். பெண் வழிப் பிரச்சினைகள் அகலும். விபரீத ராஜயோக அடிப்படையில் திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட நீங்கள் வெற்றி பெறுவீர்கள். வழக்குகள் சாதகமாக முடியும்.

என்னதான் கிரக நிலைகள் சாதகமாக இருந்தாலும் அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் நடப்பதால் ஆரோக்கியத் தொல்லை மட்டும் வந்து கொண்டே இருக்கும். குறிப்பாக நரம்பு, எலும்பு சம்பந்தப்பட்ட பாதிப்புகள், நீரிழிவு, கண் நோய் போன்றவைகள் வரலாம். மருத்துவச் செலவு மட்டும் தவிர்க்க முடியாதது.

அதே நேரத்தில் ஆன்மீகப் பயணங்களையும் மேற்கொண்டு உங்களுக்கு நடைபெறும் தெசாபுத்திக்கு ஏற்றவாறு தெய்வங்களையும் முறையாக வழிபட்டால் வந்த துயரங்கள் வாயிலோடு நிற்கும். வம் கூடும். பிள்ளைகளின் கல்யாணச் சீர்வரிசைகளை வாங்கிச் சேர்க்க உகந்த நேரம் இது. அதே நேரம் பிறருக்கு பொறுப்பு சொல்லி யாருக்கேனும் தொகை வாங்கிக் கொடுத்திருந்தால் அதில் சிக்கல்கள் உருவாகலாம்.

### குருப்பெயர்ச்சிக் காலம்

ஆண்டின் தொடக்கம் முதல் உங்கள் இராசிக்குச் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருபகவான் ஒக்டோபர் 28ஆம் திகதி அஷ்டம ஸ்தானத்தில் அடியெடுத்து வைக்கின்றார். அஷ்டமாதிபதி அஷ்டமத்தில் வரும்பொழுது ஓரளவு நற்பலன்களையே செய்வார். அதன் பார்வை பலம் உங்களுக்கு பக்கபலமாகவே இருக்கும்.

8இல் குரு வரும்பொழுது எண்ணற்ற விரயம் வரும் என்றாலும் கூட அதன் பார்வை தன் ஸ்தானத்தில் பதிவதால் பணப்புழக்கம் நன்றாகவே இருக்கும். எந்தக் காரியத்தையும் எடுத்தோம், முடித்தோம் என்று செய்வீர்கள்.

குருவின் பார்வை 4, 12 ஆகிய இடங்களில் பதிவாகின்றது. எனவே சுகங்களும், சந்தோஷங்களும் ஏற்படும். தாயின் உடல்நலம் சீராகும். பெற்றோர் வழியில் வந்த பிரச்சினைகள் அகலும். என்றைக்கோ வாங்கிப் போட்ட இடத்தை விற்பனை செய்வதன் மூலம் பல மடங்கு இலாபம் கிடைக்கும்.

### குருவின் அதிசாரமும், வக்கிரமும்

அது தீமையாய் முடியலாம். பயணங்களில் அலைச்சல் ஏற்படுமே தவிர ஆதாயம் கிடைக்காது. இக்காலத்தில் குல தெய்வ வழிபாடுகளும், இஷ்ட தெய்வ வழிபாடுகளும் உங்களுக்கு கை கொடுக்கும்.

5.6.2019 முதல் 29.6.2019 வரை ரிஷப சுக்கிரனை விருச்சிக குரு பார்க்கின்றார். இக்காலத்தில் நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். 6இற்கு அதிபதி சுக்கிரனை 8இற்கு அதிபதி குரு பார்ப்பதால் விபரீத ராஜயோகம் செயற்படும். எனவே முன்னேற்றப் பாதிப்புகள் அகலும். முக்கியப் புள்ளிகள் இல்லம் தேடி வந்து தக்க தருணத்தில் உதவி செய்வர். வெற்றிகள் குவியும் நேரமிது. பற்றாக்குறை அகலும்.

### வளர்ச்சி தரும் வழிபாடு

மாத சிவராத்திரியில் விரதமிருந்து பிரதோஷ நாளில் நந்தியை வழிபட்டு வருவது நல்லது. யோகபலம் பெற்ற நாளில் வேந்தன்பட்டி நெய் நந்தீஸ்வரரை வழிபட்டு நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் வளமாக அமைத்துக் கொள்ளுங்கள்.

### சனியின் வக்கிர காலம்

8.5.2019 முதல் 3.9.2019 வரை தனுசு இராசியில் பூராடம் நட்சத்திரக்காலில் சனி வக்கிரம் பெறுகின்றார். இக்காலத்தில் உங்கள் இராசிக்கு 9, 10 ஆகிய இடங்க

## இரண்டில் இராகு வந்த பின்பு எதிர்பார்ப்பு அனைத்தும் நிறைவேறும்!

எதையும் சாதிக்கும் திறமை உங்களிடம் உண்டு. விவேகம் உள்ளவராகவும், குடும்பப்பற்று மிக்கவராகவும் விளங்குவீர்கள். தனக்கு கொடுத்த பணியை எப்படிச் செய்யவேண்டும், எப்பொழுது செய்ய வேண்டும், எப்படிச் செய்தால் வெற்றி கிடைக்கும் என்பது பற்றிய சிந்தனையே உங்கள் இதயத்தில் இடம் பிடித்துக் கொண்டிருக்கும். உழைப்பின் மீது அதிக நம்பிக்கை வைத்திருப்பவர்கள் நீங்கள். மற்றவர்களுக்கு ஆலோசனை சொல்வதில் மகா கெட்டிக்காரர் என்று எல்லோராலும் போற்றப்படுவீர்கள். பொதுநல ஈடுபாடு உங்களுக்கு அதிகம் உண்டு. புகழ்மிக்கவர்களை நண்பர்களாகப் பெற்றிருப்பீர்கள். எதிரிகளின் பலத்தை அறிந்து கொண்டு நீங்கள் செயற்படுவதால் தான் வெற்றிக் கனியை விரைவில் எட்டிப் பிடிக்கிறீர்கள்.

### புத்தாண்டின் தொடக்க நிலை

புத்தாண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன் 6ஆம் இடத்தில் சஞ்சரிக்கின்றார். அவரோடு சகாய ஸ்தனாதிபதி சந்திரன் சஞ்சரிக்கின்றார். குரு பகவானின் அருட்பார்வை உங்கள் இராசியில் பதிகின்றது. விரயாதிபதி செவ்வாயை சப்தம ஸ்தானத்தில் இருக்கும் குரு பார்க்கின்றார்.

அஷ்டமத்தில் சனி, சூரியன், புதன் ஆகிய மூன்று கிரகங்களும் இணைந்து சஞ்சரிக்கிறார்கள். அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது குரு மங்கள யோகம்,

### ராகு-கேது பெயர்ச்சிக் காலம்


புத்தாண்டின் தொடக்கத்தில் 3ஆம் இடத்தில் ராகுவும், 9ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கின்றார்கள். பெப்ரவரி 13ஆம் திகதி அவை பின்னோக்கிச் சென்று உங்கள் வாழ்வில் முன்னேற்றம் காண வழி வகுக்கப் போகின்றது. 2இல் வரும் ராகுவால் திரண்ட செல்வம் வரும். திருப்தியான வாழ்க்கை அமையும். 'கரும்பாம்பு இரண்டில் வந்தால் கனதனம் சேரும்' என்பர். எனவே 2இல் ராகு சஞ்சரிக்கும் பொழுது பொருளாதார பற்றாக்குறை அகலும்.

இடம், பூமி போன்ற சொத்துக்களின் சேர்க்கை அதிகரிக்கும். இல்லம் கட்டிக் குடியேறும் ஆசை நிறைவேறும். தடம்புரண்டு பேசிய சொந்தங்கள் எல்லாம் இனி தானாக வந்து சரணடையும்.

அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் கேதுவால் திடீர் பாதிப்புகள் ஏதேனும் ஏற்படலாமோ என்று நீங்கள் சிந்திக்கலாம். குரு வீட்டில் கேது சஞ்சரிப்பதால் பெரியளவில் பாதிப்புகள் ஏற்படாது. இருப்பினும் வீண் விரயம் ஏற்படாமல் இருக்க சுபவிரயம் செய்வது நல்லது. பொதுவாக வீட்டுப் பராமரிப்பு செலவுகளில் ஈடுபாடு செலுத்தலாம்.

வேலைக்கு செல்பவர்களுக்கு திடீர் இடமாற்றம், இலாகா மாற்றம் ஏற்படலாம். மேலதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாகாமல் பார்த்துக்கொள்வது நல்லது. தங்கம், வெள்ளி போன்றவற்றை வாங்குவதில் தனிக்கவனம் செலுத்துவீர்கள். ஆன்மீகப் பயணம், யாத்திரைகள் செல்வதில் ஆர்

ஆண்டின் தொடக்கத்தில் விருச்சிகத்தில் சஞ்சரிக்கும் குரு, இடையில் அதிசாரமாக தனுசு இராசிக்கு மார்ச் 13ஆம் திகதி செல்கின்றார். அப்பொழுது எதிர்பாராத சிலமாற்றங்கள் ஏற்படலாம். இடையில் விருச்சிகத்தில் வக்கிர கதியிலும் இயங்குகின்றார். அப்பொழுதுதெல்லாம் திடீர், திடீரென மாற்றங்களும், ஏற்றங்களும் வந்து கொண்டே இருக்கும். அஷ்டமாதிபதி




வக்கிரம் பெறும்பொழுது ஆரோக்கியத் தொல்லை அகலும். வியாபாரத்தை விரிவுபடுத்த புதிய பங்குதாரர்கள் வந்திணைவர். வெளிநாட்டில் வேலை பார்க்க விரும்பியவர்களுக்கு திடீரென அழைப்புகள் வந்து ஆனந்தப்படுத்தலாம். மாற்று மருத்துவத்தால் உடல்நலத்தைச் சீராக்கிக் கொள்வது நல்லது.

### கவனமுடன் செயற்பட வேண்டிய காலம்

7.5.2019 முதல் 24.6.2019 வரை சனி, செவ்வாய் பார்வைக் காலமாகும். இக்காலத்தில் மிதுனச் செவ்வாயை தனுசு சனி பார்க்கின்றார். எனவே மிகப்பெரிய ஒப்பந்தங்கள் கைநழுவிச் செல்லலாம். வாடகைக்கு விட்ட வீட்டின் மூலம் பிரச்சினைகள் உருவாகலாம். வாகனப் பழுதுகள் அதிகரிக்கும். வீண் விரயங்களும், மன நிம்மதியின்மையும் உருவாகும். உறவினர்களுக்கு நன்மை செய்யப்போய்

ளுக்கு அதிபதியான சனி பகவான் பலமிழப்பதால் தந்தை வழி உறவில் விரிசல்களும், பெற்றோர்களிடம் கருத்து வேறுபாடுகளும் ஏற்படலாம். பூர்வீக சொத்துத் தகராறுகள் அதிகரிக்கும். பஞ்சாயத்துக்கள் இழுபறி நிலையிலேயே இருக்கும். தொழில்மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். தொழிலில் உள்ள பங்குதாரர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கமாட்டார்கள். எனவே, முன்னெச்சரிக்கையு டன் நடந்து கொள்வது நல்லது. பிறருக்கு பொறுப்பு சொல்வதைத் தவிர்க்கலாம்.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

ரிஷப இராசியில் பிறந்த பெண்களுக்கு இந்தப் புத்தாண்டு ஒரு இனிய ஆண்டாக அமையப் போகின்றது. வருடத் தொடக்கத்திலேயே குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் சுபச்செலவுகள் அதிகரிக்கும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். சென்ற ஆண்டில் நடைபெறாத சில காரியங்கள் இப்பொழுது நடைபெறும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளின் முன்னேற்றம் கண்டு பெருமைப்படுவீர்கள். அறிமுகமில்லாதவர்களிடம் கொடுத்த தொகையால் வந்த பிரச்சினை அகலும். தாய்வழி ஆதரவும் உண்டு. உடன்பிறப்புகளும் உங்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பர். வெளிநாட்டு முயற்சி வெற்றி பெறும். பணிபுரியும் பெண்களுக்கு குருப்பெயர்ச்சிக்குப் பிறகு கேட்ட இடத்திற்கு இடமாறுதல் கிடைக்கும். எதிர்பார்த்த சம்பளமும், வந்து சேரும். பிரதோஷ வழிபாடும், குலதெய்வ வழிபாடும் பெருமை சேர்க் கும்.

(தொடரும்)

ஜோதிடக் கலாமணி
- சிவல்புரி சிங்காரம் -

# சிறுவர் அரங்கம்

## அன்பு, வெற்றி, செல்வம்



அன்பு, வெற்றி, செல்வம், என்ற மூவரும் நண்பர்கள் ஆவார்கள். இவர்கள் நாள் தோறும் யார் அழைத்தாலும் அவர்களுடைய வீட்டிற்குச் சென்று அவர்களை உபசரிப்பது வழக்கம்.

ஒரு நாள் மாலை ஆறு மணி ஆகிவிட்டது. ஊரில் உள்ளவர்கள் எல்லோருடைய வீட்டிலும் குத்துவிளக்கேற்றி பூஜை அறையில் இறைவனை வழிபட்டுக் கொண்டிருந்தனர். அந்த சமயத்தில் ஒரு வீட்டில் வயதான பெரியவர் வீட்டுக்கு வெளியில் உள்ள திண்ணையில் அமர்ந்து கொண்டிருந்தார்.

அன்பு, வெற்றி, செல்வம் என்ற மூன்று நண்பர்களும் அந்தப் பெரியவரைப் பார்த்தவாறு தெருவில் சென்று கொண்டிருந்தனர். பெரியவர் அவர்களை அழைத்தார், அவர்களின் பெயர் மற்றும் அவர்களை பற்றி விசாரித்தார்.

உடனே பூஜை அறையில் இறைவனை வழிபட்டுக் கொண்டிருந்த தனது மருமகளுக்கு குரல் கொடுத்தார்... நமது வீட்டிற்கு வெற்றி, செல்வம், அன்பு என்ற மூன்று பேர் வந்திருக்கிறார்கள். அவர்களில் யாரை அழைப்பது என்று கேட்டார்.

அதற்கு அந்தப் பெரியவரின் மருமகள், அந்த மூவரையும் நமது வீட்டிற்கு அழைத்து வாருங்கள் அப்போது தான், நமது வீடு சந்தோசமாகவும் செல்வச் செழிப்போடும் இருக்கும் என்றாள்.

உடனே அந்தப் பெரியவர். வெளியில் காத்திருந்த அந்த மூவரையும் தனது வீட்டிற்க்கு வந்து தங்களை உபசரிக்கும்மாறு கேட்டுக் கொண்டார். அதற்கு அந்த மூவர் அளித்த பதில் என்ன தெரியுமா! எங்களில் யாரையாவது ஒருவரை மட்டும் தான் நீங்கள் அழைக்க வேண்டும் மற்ற இருவர்கள் ஊரில் உள்ள மற்ற வீடுகளுக்குச் செல்ல வேண்டும் என்றனர்.

இந்தச் செய்தியைக் கேட்டவுடன், உடனே அந்த பெரியவர் தனது மருமகளிடம் விடயத்தை சொன்னார். அதற்கு அந்த மருமகள் அப்படியானால்... நமது வீட்டிற்குச் செல்வத்தை அழைத்து வந்துவிடுங்கள். அவனைவைத்து நமக்கு தேவையான எல்லாவற்றையும் வாங்கிக் கொள்ளலாம் என்றாள்.

உடனே அந்தப் பெரியவர் செய்வதறியாமல் தனது வீட்டிற்குச் செல்வத்தை அழைத்துக்கொண்டார். மற்ற இருவர்கள் புறப்பட்டுச் சென்றுவிட்டனர்.

வெற்றி, மற்றும் அன்பு ஆகிய இருவர்களில் வெற்றியை ஒரு வீட்டுக்காரர் அழைத்துக்கொண்டார். பிறகு அன்பு தனிமைப்படுத்தப்பட்டான். கடைசியாக ஒரு ஏழை விவசாயி வேறு வழியின்றி அன்பைத் தனது வீட்டிற்கு வந்து தங்களை உபசரிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

சிறிது நாள் சென்றது. தனது நண்பன் அன்பு என்றவனைக் காணாமல், பேசாமல் இருந்ததால் துடிதுடித்துப் போய்விட்டார்கள் வெற்றியும் செல்வமும்.

வெற்றியும் செல்வமும் உடனே ஒரு முடிவை எடுத்தார்கள். அவர்கள் குடிக்கொண்ட வீட்டில் உள்ளவர்களை அழைத்து "அன்பு" எங்களது ஆருயிர் நண்பன் அவனைக் காணாமல் பேசாமல் எங்களால் ஒரு நொடியும் இருக்க முடியாது.

ஆகையால் தயவு செய்து எங்களை மன்னித்து விடுங்கள் என்று சொல்லிவிட்டு மறு கணமே அங்கிருந்து கிளம்பிவிட்டார்கள் அன்பு இருக்கும் இடத்திற்கு.

அன்பு இருக்கும் இடத்தில் தான் வெற்றியும் செல்வமும் நிலைத்திருக்கும். மற்ற இடங்களில் ஒரு வேளை வெற்றியும் செல்வமும் இருந்தாலும் அது நிலைத்திருக்காது என்பது உண்மை.

அவற்றை இந்தக் கதையின் மூலம் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

அன்பு என்றால்! மன்னிப்பு, சகிப்புத்தன்மை, கருணை, விட்டுக்கொடுக்கும்மனப்பான்மை, நன்மை மற்றும் தீமையைக் கண்டறியும் தெளிவு, பாசம், முரட்டுத்தனம் இல்லாத காதல். இவையெல்லாம் மனிதக் குலத்திற்கே உள்ள கடவுள் கொடுத்த மகத்தான சொத்து.

இத்தகைய சொத்தை பயன்படுத்தி வாழ்க்கையில் மோகம் இல்லாமலும் வெறுப்பு இல்லாமலும் கொடூரங்களைச் செய்யாமலும் வாழ்க்கையின் நியதி அறிந்து நிம்மதியாக வாழலாம்.

## மலர்கள் மணம் பரப்புவது எப்படி?



எவ்வளவோ செடிகளைப் பார்க்கிறோம். எத்தனையோ மலர்கள். ஒவ்வொன்றும் ஒரு விதம். அந்த மலர்களின் அமைப்பு, மென்மை, அழகு ஆகியவை நம்மை வியக்க வைக்கின்றன. சில செடிகளின் மலர்கள் என்று நினைப்பது உண்மையில் மலர்களாக இருக்காது. சில செடிகளில் வெண்ணிற உறைகளில் இருந்து எட்டிப் பார்ப்பவை மலர்களே அல்ல. மலர் போலத் தோற்றமளிக்கும் போலிகள்! சில செடிகளின் வண்ண இலைகளே மலர்கள் போல் காட்சியளிக்கும்.

மலர்கள் இல்லாதவற்றை மலர்கள் என்று எண்ணுகிறோம். சில செடிகளில் மலர்களை நம் மால் அடையாளம் தெரிந்து கொள்ள முடிவதில்லை. புற்களின் நுனியில் உள்ள சிறு துணுக்குகள் புற்களின் மலர்கள்தான்! சில தானியங்களின் இளங்கதிர்களே அவற்றின் மலர்கள்.

பூந்தாதையோ, விதைகளையோ அல்லது இரண்டையுமே உருவாக்கும் தொகுதியே மலர்களாகும். விதைகளை உடைய தாவரத்துக்கே மலர்கள் உள்ளன. விதைகள் உருவாக்குவதற்குக் காரணமாக உள்ள தாவரத்தின் பாகங்களே மலர்கள் என்று சொல்லலாம்.

மகரந்தச் சேர்க்கை புரிய உதவும் பூச்சியினங்களைக் கவர்ந்திழுக்க, பூக்கள் நறுமண வலையை வீசுகின்றன. பூவிதழ்களிலேயே வாசனை தரும் மிகச் சிறிய துகள்கள் உள்ளன. அவையே நறுமணத்தை ஏற்படுத்துகின்றன. பூச்சிகளை மகரந்தம் இருக்கும் இடத்துக்கு அழைத்துச் செல்லும் வழிகாட்டியே நறுமணம் என்கிறார்கள், தாவரவியல் நிபுணர்கள்.

சில மலர்களின் இதழ்களில் உள்ள ஒருவித எண்ணை, நறுமணத்தை உண்டு பண்ணுகிறது. அந்த எண்ணைகளைத் தாவரங்கள் தங்கள் வளர்ச்சியின்போது உற்பத்தி செய்திருக்க வேண்டும். மிகச் சிக்கலான அப்பொருள், நடைமுறையில் உருக்குலைந்தோ, சிதைந்தோ எண்ணையாக மாறி காற்றிலோ, வெயிலிலோ ஆவியாகி நறுமணத்தை வெளியிடுகிறது.

எல்லா மலர்களின் நறுமணமும் ஒரேவிதமாக இருப்பதில்லை. சிலவற்றை நாம் விரும்புவோம். சில நமக்குப் பிடிக்காது. ஆனால் பூச்சியினங்களுக்கு ஒவ்வொரு நறுமணமும் நன்றாக நினைவில் இருக்கும்.

தங்களுக்கு விருப்பமான நறுமணத்தை அவை அறிந்திருக்கும்.

சூழ்நிலையை அனுசரித்து நல் மனச்சாட்சிக்கு ஒப்பான கடமையைச் செய்.

– யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சுயநல அரசியலை கைவிட்டு தமிழினத்துக்காக பாடுபடுங்கள்

இன்று 2019ஆம் ஆண்டு முகிழ்ப்படைகிறது. பிறக்கின்ற புதிய ஆண்டு அனைவருக்கும் நன்மை பயப்பதாக அமைய எல்லாம் வல்ல இறைபரம்பொருளின் திருவடிகளை மனம் மெய் மொழிகளால் பிரார்த்திக்கின்றோம்.

2018ஆம் ஆண்டின் பிற்பகுதி அரசியல் குழப்பத்தை தந்து போனது மிக மோசமான குழப்பமாக அது அமைந்திருந்த போதிலும் ஏதோவொரு வகையில் குழப்பங்கள் தணிந்து கொண்டன.

ஆனாலும் 2018இன் இறுதிப்பகுதியில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்கள் 2019ஆம் ஆண்டிலும் தாக்கம் செலுத்தவே செய்யும்.

இதுதவிர, 2018ஆம் ஆண்டின் இறுதிப் பகுதி வன்னிப் பிரதேசத்தில் வெள்ள அனர்த்தத்தை ஏற்படுத்தி ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் பெரும் பாதிப்படைய நேர்ந்தது.

ஆக, 2018இன் இறுதிக்காலம் இலங்கைக்கு ஒத்துவரவில்லை என்ற உண்மையோடு 2018ஆம் ஆண்டில் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு கிடைக்கும் என்ற உறுதிமொழிகளும் ஸ்தம்பித்துப் போயின.

வழமைபோல் ஆண்டுக்கணக்கில் காலம் கடத்தப்படும் தீர்வுத்திட்டம் அரசியலமைப்பு என்ற பெயரில் 2019ஆம் ஆண்டின் முற்பகுதியில் வெளிவரும் எனக் கூறப்படுகிறது.

நடந்தால் கண்டு கொள்ள வேண்டியதுதான் என்றளவில் அதனை ஒருபுறம் வைத்துவிட்டு 2019ஆம் ஆண்டின் பிறப்புச் சாதகத்தின் பலன்களைப் பார்க்கின்றபோது,

தேர்தலுக்குரிய ஆண்டாக 2019ஆம் ஆண்டு அமையப் போவது உறுதி.

தேர்தல் ஆண்டாக 2019 இருக்குமாயின் ஆட்சி மாற்றத்துக்கான ஏற்பாடுகள், கடுமையான தேர்தல் கலவரங்கள் என்பவற்றுக்கு குறைவிருக்காது.

இந்த நிலைமை தமிழினத்திலும் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தவே செய்யும்.

எதுவாயினும் 2019ஆம் ஆண்டு பிறக்கின்ற இந்தவேளை, தமிழ் இனத்துக்காகப் பாடுபடுவதாகக் கூறிக்கொள்ளும் அத்தனை அரசியல்வாதிகளும் தத்தம் சொந்த நலனுக்காக அரசியல் நடத்துகின்ற கயமைத்தனத்தை கைவிட்டு, தமிழினத்துக்காக தூயமனத்துடன் தூய சிந்தனையுடன் அரசியல் நடத்த வேண்டும் என்பது நம் தாழ்மையான கோரிக்கை.

சிங்களப் பேரினவாதம் தமிழினத்தை ஏமாற்றியது முதல் ஈவிரக்கம் இன்றி தமிழினத்தின் மீது போர்தொடுத்ததால் ஏற்பட்ட இழப்புக்கள் நம் இனத்தை வாட்டி நிற்கின்றபோது,

தமிழ் அரசியல்வாதிகளும் ஆசாடபூதிகளாக கோலம் கொண்டு தமிழ் மக்களை ஏமாற்றினால் அவர்களை என்னதான் செய்ய முடியும்

ஆகையால் சொந்த நலன் என்பதை முழுமையாகக் கைவிட்டு தமிழினத்தின் நலனை முன்னிறுத்தி அரசியல் பணியில் ஈடுபட வேண்டும் என்பது 2019ஆம் ஆண்டின் மலர்வில் முன்வைக்கும் கோரிக்கையாகும்.

அதேநேரம் தமிழ் மக்களும் தூய அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்த தங்களைப் புடம் போட்டு பெறுமதியானவர்களை, ஏமாற்றாதவர்களை, நேர்மையாளர்களை தங்கள் அரசியல் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்ய வேண்டும் என்ற உறுதியையும் 2019ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்வது அவசியம்

இந்த உறுதிமொழி நிச்சயம் எம் இனத்துக்கு விடிவைப் பெற்றுத் தரும்.

### கிளி., விசுவமடு பகுதியில்
## வங்கி ஒன்றில் தீ பரவல் பல பொருட்கள் எரிந்து நாசம்

கிளிநொச்சி மாவட்டம் விசுவமடுப் பகுதியில் உள்ள வங்கி ஒன்றில் நேற்று அதிகாலை தீ பரவியுள்ளது. காலையில் பணிக்கு வருகை தந்த உத்தியோகத்தர்கள், வங்கியை திறந்தபோது வங்கி புகைமண்டலமாக சிறிது நேரம் காட்சியளித்தது.

வங்கியிலிருந்து புகை வருவதனை அவதானித்த அயலில் உள்ள வர்த்தகர்கள் உடனடியாக, அது தொடர்பில் வங்கி ஊழியர்களுக்குத் தகவலை வழங்கினர். உடனடியாக தீ அணைப்பு சேவையின் உதவியும் நாடப்பட்டது.

இருந்தபோதும் வங்கியில் இருந்த கணனிகள் உள்ளிட்ட பல பொருள்கள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளது. குறித்த தீ முதன் முதலாக காசு எண்ணும் இயந்திரத்தில் இருந்தே பரவியிருக்கலாம் எனத் தெரிவிக்கப் படுகிறது.

தீயிற்கான காரணம், சேதம் தொடர்பில் உடனடி விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-3,281)

### யாழ்.குருநகர் பகுதியில்
## வாள்வெட்டில் ஒருவர் காயம்

குருநகர் கலாசார மண்டபத்துக்கு முன்னால் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் அதேஇடத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் இடது கைவிரல் செயலிழந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

நத்தார் பண்டிகையை முன்னிட்டு யாழ்ப்பாணத்திலுள்ள புடைவை நிலையம் ஒன்றில் ஏற்பட்ட முரண்பாடே குறித்த சம்பவத்துக்கு காரணம் எனத் தெரிவிக்கப் படுகிறது.

சம்பவம் தொடர்பாக யாழ்.பொலிஸ் நிலையத்தை தொடர்பு கொண்டு கேட்டபோது, இரு பகுதியினரும் வாள்வெட்டில் ஈடுபட்டதாகவும் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவித்தனர். (ம-3,10)

## பொலிஸ் தடுப்பிலிருந்த கைதி ஒருவர் தற்கொலை

(கொழும்பு)

கட்டுகஸ்தோட்டை பொலிஸ் நிலையத் தடுப்பில் வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் தற்கொலை செய்துள்ளார்.

உயிரிழந்த குறித்த கைதியின் வயது 26 என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

குறித்த சந்தேக நபர் நேற்று முன்தினம் கஞ்சா போதைப்பொருளுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இந்தநிலையில், அவரின் மரணத்திற்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

## பிலிப்பைன்ஸில் நிலச்சரிவு பலி எண்ணிக்கை 50 ஆக உயர்வு

(மணிலா)

பிலிப்பைன்ஸில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 50 ஆக அதிகரித்துள்ளது என பேரிடர் மேலாண்மை துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டின் தெற்குப் பகுதியில் உள்ள மிண்டானோ தீவில் கடந்த 29ஆம் திகதி சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவு கோலில் 6.9 அலகாக பதிவானதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

இதற்கிடையே, பிலிப்பைன்ஸ் நிலநடுக்கத்தை தொடர்ந்து அங்கு ஏற்பட்ட நிலச்சரிவு மற்றும் வெள்ளத்தில் சிக்கி 22 பேர் பலியானதாக முதல் கட்டமாகத் தகவல் வெளியானது.

இந்நிலையில், பிலிப்பைன்ஸில் நிலச்சரிவு, வெள்ளத்தில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 50 ஆக அதிகரித்துள்ளது என பேரிடர் மேலாண்மை துறை அதிகாரிகள் தெரிவித்தனர். (4-7)

### யாழ்.நெல்லியடி பகுதியில்
## பொலிஸார் மீது தாக்குதல் முச்சக்கரவண்டி சாரதி கைது

(கரணவாய்)

நெல்லியடிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்கு முன்னாள் நேற்று முன்தினம் இரவு 9.30 மணிக்கு வீதிக் கடமையில் ஈடுபட்ட பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

இரவுக் நேரக் காவல் கடமைக்காக கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்கு முன்னால் நின்ற நெல்லியடிப் பொலிஸார் அவ் வீதியால் வேகமாக வந்த முச்சக்கர வண்டியை நிறுத்த முற்பட்ட வேளை குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் மீது தாக்குதல் நடத்தி விட்டுச் தப்பிச் சென்றதாக தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் விரைந்து செயற்பட்ட பொலிஸார் தாக்குதல் நடத்திய முச்சக்கரவண்டியையும் அதன ஓட்டுநரையும் கைது செய்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்றதாக தெரிவிக்கப்பட்டது. (ம-10,60)

### பேராசிரியர் சண்முகதாஸின் அகவை நிறைவில்
## மார்கழித் திங்கள் விழா இன்று

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக துறைசார் வாழ்நாள் பேராசிரியரும் யாழ்ப்பாணத் தமிழ் சங்கத்தின் தலைவருமான பேராசிரியர் அ.சண்முகதாஸின் அகவை நிறைவையொட்டி இன்று செவ்வாய்க் கிழமை பி.ப 4 மணிக்கு மார்கழித் திங்கள் விழா நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் பிரதி அதிபர் ச.லலீசன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பேராசிரியர் அ.ச்ண்முகதாஸின் பேர்த்தி அபிநயனி ஸ்ரீகசிறியினால் (அவுஸ்திரேலியா) இறை வாழ்த்தும் மற்றும் தமிழ்மொழி வாழ்த்து என்பன இசைக்கப்படவுள்ளதோடு வரவேற்பு நடனத்தை அபிநயா றஜீவன் நிகழ்த்தவுள்ளார்.

சட்டத்தரணி சர்மினி விக்னேஸ்வரனின் வரவேற்புரையைத் தொடர்ந்து அகவை வாழ்த்துரைகளை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா ஆகியோர் நிகழ்த்துவா.

மார்கழித் திங்கள் குறித்து வெளியிடப்படும் நூலுக்கான அறிமுகவுரையை முனைவர் ச.மனோன்மணி நிகழ்த்தவுள்ளதோடு தென்கிழக்குப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர்முனைவர் க.இரகுபரன் நூல் நயப்புரையினை நிகழ்த்தவுள்ளார்.

அத்துடன் மார்கழித் திங்கள் என்ற பொருளில்அமைந்த சிறப்புரையை செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## பட்டாசு வெடிக்கும் போது...

- தீபாவளி என்றவுடன் நினைவிற்கு வருவது பட்டாசு. அதை வெடிக்கும் போது நமக்குள்ள சந்தோசம் இன்னும் இரட்டிப்பாகிறது.
- முதலில் பட்டாசு வாங்கும்போது தரமானதாக வாங்குங்கள். அத்துடன் தீக்காயங்களுக்குரிய முதலுதவி மருந்துகளையும் தவறாமல் வாங்க வேணடும். யானை வாங்குபவன் அங்குசம் வாங்க அழுதது போல் பட்டாசு வாங்கிவிட்டு முதலுதவி மருந்து வாங்காமல் இருக்கக் கூடாது. பட்டாசு வெடிக்கும் சமயங்களில் மிகக் கவனமாக இருத்தல் அவசியம்.
- குழந்தைகளைக் கையில் பிடித்துக்கொண்டு பட்டாசு வெடிப்பதைத் தவிர்க்கச் சொல்லுங்கள்.
- தண்ணீர் ஒரு வாளியில் தயார் நிலையில் வைத்துக்கொள்ளுங்கள்.
- புத்தாடை அணிந்து கொண்டு கவனமாக வெடியுங்கள்.
- அடுப்பில் மத்தாப்பு போன்றவற்றைப் பற்ற வைக்கக்கூடாது. விளையாட்டு விபரீதம் ஆகும் என்பதை உணர்ந்து செயற்படுங்கள்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- குறிக்கோளில் செலுத்தும் கவனத்தை போலவே, அதை அடையும் பாதையிலும் கருத்தைச் செலுத்துங்கள்.
- ஒவ்வொரு உயிரிலும் உறைந்திருக்கும் தெய்வீக சக்தியை வெளிக்கொண்டு வருவது தான் நம் வாழ்வின் லட்சியம்.
- தன்னை அடக்கியாளப் பழகியவன் ஒருபோதும் புற உலக விஷயங்களுக்கு அடிமையாக மாட்டான். அத்தகையவனே உலகில் வாழத் தகுதி படைத்தவன்ஆகிறான்.
- ஒருவன் நெருப்பில் கூட தூங்க முடியும். ஆனால், வறுமை நிலையிலோ கணப்பொழுதும் கண்மூடித் தூங்க முடியாது.
- மனமும, உடலும் ஒருமித்து இருக்கும் போது எந்தச் செயலில் ஈடுபட்டாலும் அதில் வெற்றியே கிடைக்கும்.
- பெரிய விடயங்களை நிறைவேற்றும்போது இடையூறுகள் குறுக்கிடவே செய்யும். அதனால் ஆண்மையோடு தொடர்ந்து முயற்சியுங்கள்.
- பசியால் நலிந்து வாடும் ஏழைகளிடம் ஆன்மீகம் பேசுவது அவர்களை அவமதிப்பதாகும்.

## கொவிசெத

| | |
|---|---|
| திகதி | 2018.12.31 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1990 |

ஆங்கில எழுத்து: Y — வெல்லப்பட்ட இலக்கங்கள்: 02 10 22 66

தேசிய லொத்தர் சபை

## மஹஜன சம்பத

| | |
|---|---|
| திகதி | 2018/12/31 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 3823 |

ஆங்கில எழுத்து: V — வெல்லப்பட்ட இலக்கங்கள்: 5 0 2 1 1 7

தேசிய லொத்தர் சபை

## சுபிரி வாசனா

| | |
|---|---|
| திகதி | 2018/12/31 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1391 |

எழுத்து: 07 — வெற்றி இலக்கம்: 10 14 21 68 — 32 61

தேசிய லொத்தர் சபை

## மெகா பவர்

| | |
|---|---|
| திகதி | 31/12/2018 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 325 |

வெற்றி எழுத்து: F — சுப்பர் இலக்க: 01 — வெற்றி இலக்கங்கள்: 15 35 52 67

தேசிய லொத்தர் சபை

# புத்தாண்டு சிறப்பு மலர் - 2019

HAPPY 2019 NEWYEAR


மானிப்பாயில்

அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்

HONDA

## ரஞ்சிற் மோட்டோர்ஸ் (RRSC MOTORS)

கொண்டா மோட்டார் சைக்கிளினைக் கொள்வனவு செய்து பண்டிகைக்கால சிறப்பு சலுகைகளைப் பெற்றிடுங்கள்.

எம்மிடம் குறைந்த ஆவணங்களுடன் லீசிங் செய்யும் வசதி

எம்மிடம் விசேட சலுகைகள்

அனைத்து வகையான பழைய மோட்டார் சைக்கிள்களைக் கொடுத்து புதிய கொண்டா மோட்டார் சைக்கிளைப் பெற்றிடும் வசதி

**முழுப் பணம் மூலமாக** — Special OFFER

- சிறப்புப் பரிசில்
- காப்புறுதி (மூன்றாம் நபர்)
- யக்கெட்
- இலவச சேவைகள்
- இரண்டு வருட உத்தரவாதம்

HAPPY NEW YEAR 2019

**லீசிங் மூலமாக** — Special OFFER

- சிறப்புப் பரிசில்
- பதிவுக்கட்டணம்
- காப்புறுதி
- தலைக்கவசம்
- யக்கெட்
- இலவச சேவைகள்
- இரண்டு வருட உத்தரவாதம்

எமது சேவைகள்

- மோட்டார் சைக்கிள் விற்பனை
- உதிரிப்பாக விற்பனை
- மெக்கானிக் அன் சேர்விஸ்

(C-4964)

rrscmanipay@gmail.com — Honda Ranjit

ரஞ்சிற் மோட்டோர்ஸ் (RRSC MOTORS)
இல.311A யாழ்.வீதி. மானிப்பாய்.
(சுதுமலைச் சந்தி அருகாமை)

T.P:021 492 7627 | 021 225 5228
077 310 7549 | 076 833 9898



## நெல்லியடி கிளினிக்

### பகல் நேர தாதியர் பராமரிப்புச் சேவை

வீடுகளிலுள்ள படுக்கை நோயாளிகள், அசைய முடியாதவர்களுக்கான தாதியர் பராமரிப்புச் சேவை அங்கீகாரம் பெற்ற தாதிய உத்தியோகத்தர்கள் மூலம் வழங்கப்படும்.

1. Dressing
2. NG Tube
3. Urinary Catheter
4. IV Drip
5. Investigations

**வீட்டிலிருந்தவாறே நீங்கள் அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்**

**021 226 2428**

**01.01.2019 முதல் ஆரம்பம்**

நிர்வாகம் : நெல்லியடி கிளினிக்
மத்திய கல்லூரி வீதி.

(C-4966)



## Florance Nightingale School of Nursing

### புளோரன்ஸ் நைற்றிங்கேல்

தாதியர் பயிற்சிப் பாடசாலை

தாதியர்களுக்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டு வைத்தியசாலையில் வேலைவாய்ப்புக்கள் பெற்றுத் தரப்படும்

2019ஆம் ஆண்டுக்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பாட முடிவில் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

முற்பதிவுகளுக்கு முந்திக்கொள்ளவும்

| | |
|---|---|
| தகைமை | : O/L, A/L |
| வயது | : 18 - 35 வரை |
| உயரம் | : 125 cm மேற்பட்டவர்கள் |
| நிறை | : 38 - 75 உட்பட்டவர்கள் |

04.01.2019 முன் வருவோர்களுக்கு முற்பணம் குறைக்கப்படும்

தொடர்புகளுக்கு :- 077 718 6438, 021 492 8916, 021 433 8919

முகவரி:-
குஞ்சர் கடையடி, நெல்லியடி.
(சுபாஸ் பேக்கரி மேல்தளம்)

கே.கே.எஸ்.றோட்,
மருதனார்மடம்.
(ஆஞ்சநேயர் கோவில் முன்)

(C-4995)



With Best Compliments From

## Vino Book Center

## வினோ பொத்தகசாலை

எம்மிடம் புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், அப்பியாசக்கொப்பிகள், அன்பளிப்புபொருட்கள் பத்திரிகைகள், போட்டோகொப்பி, ரைப்பிங் அன்ட் பிறின்டிங், பக்ஸ், ஈமெயில், புத்தகம் கட்டுதல், லேமினேரிங் மின்சாரபட்டியல் கட்டணங்கள், வீரகேசரி,உதயன், வலம்புரி பத்திரிகைகளுக்கான விளம்பரங்கள் இன்னும் பல சேவைகள்

Photo Copy • Books • Stationary items

021 229 0280 — vinobookcenter@gmail.com

021 229 0280 | 077 998 9911 — Post Office Road, Mullaitivu.

(C-4963)

## 333 கோடிரூபாய்...

அதி கூடிய ஹெரோயின் போதைப்பொருள் இது வாகும் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

தெஹிவளை கௌடான வீதியில் சொகுசு வீடொன்றிலிருந்து இந்தப் பெருந் தொகையான போதைப்பொருளுடன் சந்தேக நபர்கள் நேற்று கைது செய்யப்பட்டனர்.

அத்துடன், சந்தேகநபர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் பின்னர் அதே வீட்டிலிருந்து சுமார் 75 மில்லியன் பெறுமதியான 5 கிலோ கிராம் கொக்கெய்ன் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. வீட்டை சோதனையிட்ட பொலிஸாரால் 278 கிலோகிராம் ஹெரோயின் மீட்கப்பட்டது.

அதன் பெறுமதி 3 ஆயிரத்து 336 மில்லியன் (333 கோடி) ரூபாயுக்கும் அதிக பெறுமதிவாய்ந்தது.

இவ்வளவு தொகையான ஹெரோயின் எவ்வாறு இலங்கைக்கு கடத்தப்பட்டது என்ற கோணத்தில் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்தது. (ம-3)

## ரயில் மோதி...

யளவில் இடம்பெற்றது. கொழும்பிலி ருந்து யாழ்ப்பாணம் நோக்கிப்பயணித்த புகையிரத்தில் மோதுண்டு 27 இற்கும் மேற்பட்ட மாடுகள் உயிரிழந்துள்ளது. இதைவிட, பலமாடுகள் காயமடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-315)

## ஆளுநர் கூரே...

தெரிவித்தார்.

நேற்றையதினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் விடுத்த உத்தரவுக்கமைய வடக்கு கிழக்கு உட்பட ஒன்பது மாகாணங்களின் ஆளுநர்களையும் பதவி விலகுமாறு கோரியதற்கமையவே இவ்வாறு இடம்பெற்றதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-10)

## கூட்டமைப்பு அரசி...

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வலியுறுத்தியிருக்கிறார்.

வடமத்திய மாகாணத்தில் நொச்சியாகம பகுதியில் நேற்று பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றிய தற்போதைய எதிர்க்கட்சித் தலைவரான ராஜபக்ஷ, அரசாங்கத்துக்கு அளிக்கின்ற ஆதரவு மூலமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் ஆதாயம் அடையக் கூடும். போரின் மூலமாக அடையமுடியாததை அரசியலமைப்பின் ஊடாக அவர்கள் அடைந்துவிட ஒருபோதும் அனுமதிக்கவே கூடாது என்று குறிப்பிட்டார்.

புதிய அரசியலமைப்பொன்றை பிரதமர் விக்கிரமசிங்க அறிமுகப்படுத்தும்போது சூழ்ச்சித்தனமான வழிவகைகளின் ஊடாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அரசியல் சுயாட்சியைப் பெற்றுக்கொள்வதற்கு தாங்கள் அரசாங்கத்துக்கு அளிக்கின்ற ஆதரவை பயன்படுத்துவார்கள் என்று எச்சரிக்கை செய்த ராஜபக்ஷ இந்த நாடு பிரிக்கப்படவோ அல்லது துண்டாடப்படவோ முடியாது. எல்லோரும் ஐக்கியப்பட்டு நிற்கவேண்டும் என்று அழைப்பு விடுத்தார். (ம-3)

## யாழ் மூளாய் பகுதி...

னால் வெட்டி காயப்படுத்தியுடன், மற்றுமொரு வயோதிபர் மீதும் வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டதுடன் தப்பிச் சென்றுள்ளனர்.

குறித்த சம்பவத்தில் வாள்வெட்டுக்கு இலக்கான இளைஞன், சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளதுடன், வாள் வெட்டுக் கும்பலிடமிருந்து மீட்ட வாள் ஒன்றினையும் பொலிஸில் ஒப்படைத்துள்ளார்.

அதேவேளை தாக்குதலுக்கு இலக்கான வயோதிபரும், சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

குறித்த முறைப்பாடுகளுக்கமைய வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3)

# த.தே.கூ.தலைவர் சம்பந்தன் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி



(கொழும்பு)

மலர்ந்துள்ள இந்த புத்தாண்டானது இலங்கை வாழ்மக்களுக்கு செழிப்பானதும் மகிழ்ச்சிகரமானதுமாக அமையஎனது வாழ்த்துக்கள்.

ஒரு புதிய வருடத்திற்குள் காலடி எடுத்து வைக்கும் இத்தருணத்தில் இவ்வருடமானது இந்நாட்டு மக்களுக்கு நம்பிக்கையையும் எதிர்பார்ப்பினையும் கொண்டு வருகிற ஆண்டாக அமைய நான் பிரார்த்தனை செய்கிறேன். கடந்த வருடமாவது சாதகமான, பாதகமான நிகழ்வுகளினூடாக பல்வேறு படிப்பினைகளை எமக்கு கொடுத்துள்ளது. இந்தப் படிப்பினைகளை எமது வாழ்வினை வளப்படுத்திக் கொள்வதற்கு பயனாக்கிக் கொள்ளும் அதேவேளை மற்றவர்களின் வாழ்விலும் நன்மையைக் கொண்டு வருமுகமாகவும் பயன்படுத்திக் கொள்வோமாக.

சமூகங்களிடையே பிரிவினையை கொண்டுவரும் பாதக காரணிகளுக்கு நாம் அகப்பட்டு போகாமல் அதே வேளை, சமூகங்களை இன மத அடிப்படையில் பிரிக்கும் குறுகிய அரசியல் எண்ணம் கொண்ட பிரிவினைவாதிகளுக்கெதிராகவும் செயற்பட இந்த புதிய வருடத்தில் திடசங்கற்பம் கொள்வோமாக. மேலும் பாதிக்கப்பட்ட சமூகங்கள் தமது நீண்டகால பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் இந்த புதிய வருடத்தில் அடைந்திட வேண்டும் என நான் பிரார்த்தனை செய்கிறேன்

நீதி மற்றும் சமத்துவம் என்பவற்றின் அடிப்படையில் பிரிக்க முடியாத பிளவுபடாத ஒருமித்த நாட்டிற்குள் தேசிய பிரச்சினைக்கான நிரந்தர தீர்வினை அடைந்திட முன்வருமாறு அரசியல் தலைவர்கள், சமயத் தலைவர்கள் மற்றும் சிவில் சமூகத்தினர் ஆகியோரை அழைத்து நிற்கிறேன். இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலருணவு




(ஜெயபுரம்)

வடமாகாண இலங்கை வங்கி ஓய்வூதியர் சங்கத்தால் கிளிநொச்சி ஜெயபுரத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலருணவு பொருட்கள் ஓய்வூதியர் சங்கத்தலைவர் உலகநாதன் தலைமையில் அண்மையில் வழங்கப்பட்டன. (இ-7)

## அரசியலமைப்பை...

அமைச்சர்கள் மாத்திரமே நியமிக்க முடியும் என அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரதமருக்கு அரசியலமைப்பை மீற முடியாது. ஜனாதிபதி அரசியலமைப்பை மீறி செயற்பட்டாலும், பிரதமர் ஒருபோதும் அரசியலமைப்பை மீற மாட்டார்.

பிரதமர் இலங்கை பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர். சிறந்த கல்வியாளரான பிரதமர் அரசியலமைப்பை மீறி செயற்பட மாட்டார் எனக் குறிப்பிட்டார். (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## வடக்கு முழுவதும் இ.போ.ச...

போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய இணைந்த தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் அந்த தொழிற்சங்கம் உரிய தரப்புகளுக்கு அனுப்பிவைத்த அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

வடபிராந்திய பிரதம பிராந்திய முகாமையாளர் இன்றைய காலத்தில் வடபிராந்திய சாலைகள் இழுத்து மூடப்பட வேண்டிய கட்டாயத்தில் இயங்கிவருகின்றன.

ஏற்கெனவே எம்மால் எழுத்து மூலமாக முன்வைக்கப்பட்ட பத்துக் குற்றச்சாட்டுகளுக்கு இதுவரை உரிய தீர்வு கிடைக்கப்பெறாத காரணத்தினால் வட பிராந்திய தொழிலாளர்கள் மிகுந்த அச்சத்துடனும் வேதனையுடனும் தங்களது சேவையை ஆற்றி வருகின்றனர்.

இது வரை பொதுமக்களுக்கு அவர்களின் சேவைகள் பாதிக்கப்படாத வகையில் போராட்டங்கள் வட பிராந்திய பிரதம பிராந்திய முகாமையாளருக்கு எதிராக மேற்கொண்டோம். இன்று வரையில் அவற்றிற்கு தீர்வுகள் எவையும் கிடைக்கப்பெறவில்லை.

ஆனால் வேறு வழியின்றி வட பிராந்திய தொழிலாளர்களின் நன்மை கருதி முகாமையாளரை வடக்கிலிருந்து வெளியேற்றித்தருமாறும் புதிய பிரதான பிராந்திய முகாமையாளராக வட பிராந்திய தொழிலாளர்களுடன் இணைந்து இ.போ.ச வைக் கட்டியெழுப்பக்கூடிய திறன் வாய்ந்த முகாமையாளரை நியமிக்குமாறு ஏழு சாலை ஊழியர்களின் சார்பாக கேட்டுக் கொள்கின்றோம்.


எதிர்வரும் 3ஆம் திகதிக்குள் எமது கோரிக்கைக்கு நியாயமான தீர்வு கிடைக்கா விட்டால் 4ஆம் திகதி முதல் வடபிராந்திய ஏழு சாலை தொழிற்சங்கங்கள் இணைந்து வட பிராந்திய ஏழு சாலைகளின் செயற்பாடுகளையும் முடக்கி மாபெரும் தொழிற்சங்கப் போராட்டம் ஒன்றினை மேற்கொள்ளவுள்ளோம் என்றுள்ளது. (ம-3)

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை நடராசா

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் கட்டடத்திணைக்களம்)

பிறப்பு : 01.05.1937 இறப்பு : 31.12.2018



தும்பளை மேற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நடராசா அவர்கள் 31.12.2018 திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - பொன்னம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற அமிர்தசேகரம் - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், தவமணியின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற மதிபாலசிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), காலஞ்சென்ற மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்புச் சகோதரனும் மற்றும் பார்த்திபன் (கனடா), சேகர் (கிராம அலுவலர் குடத்தனை - J/419), உமாகாந்தன் (கதிரியல் வைத்திய நிபுணர் ஆதார வைத்தியசாலை முல்லைத்தீவு), மனோகர் (கனடா) சுதாகர் (ஆசிரியர் யா/வல்வெட்டி இ.த.க பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயவதனா, அமிர்தினி, வத்சலா, நீரஜா, சர்மிலா ஆகியோரின் அன்பு மாமனாரும், மதுரந்தி, அபிநயா, அபிஷாகர், அபிவர்ணன், அபிமன்யு, பிஜுசன், அக்ஷயா, சுவிற்றா, நிவன், பர்மிஷன், காருண்ஜன், கபீஷன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.01.2019) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புதுவளவு தும்பளை மேற்கு, பருத்தித்துறை.

தகவல் : குடும்பத்தினர்
021 226 3455

(C-4957)

கலை|வர்த்தகம்
தொழில் நுட்பம்
A/L 2021
NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
ஆரம்பம்: 06.01.2019 ஞாயிறு காலை 8.00 மணி
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன
A/L 2018 உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றில் யாழ் மாவட்டத்தில் முன்னனி பெறுபேறுகளுடன்...
A/L DAY CLASS NEC
ஆரம்பம்: 02.01.2019 புதன் காலை 7.00 மணி



A/L பரீட்சையில் சித்தியில்லையா...?
பல்கலை அனுமதி கிடைக்கவில்லையா?
ரூ. 57,600 - ரூ. 570,441 சம்பளத்துடன்
டுபாய், குவைத், ஓமான், பாஃரேன், கட்டார் நியூசிலாந்து, அவுஸ்ரேலியா, கனடா
Work Visa & Student Visa
ஏற்பாடுகளுடன்
ஹொட்டேல் முகாமைத்துவம்
Tourism & Hospitality Management (3 மாதம்)
குறுகிய கால தொழிற்துறைப் பயிற்சியுடன்
உடனடி வேலைவாய்ப்பு!
Restaurant Supervisor / Manager, Steward, Kitchen Helper, Waiter, Housekeepers, Barista, Sandwich Maker, Commis I, II, III & Chef
மேலதிக விபரங்களை அறிய
ஹொட்டேல்துறை & வெளிநாட்டு வேலைவாய்ப்பு கண்காட்சி & கருத்தரங்கு
ஜன. 5 10 மணி
0777 324 004, 021 222 00 11
No.1 Award Winning Institute of the North
SIKARAM ACADEMY
Business - Hospitality - English
SCHOOL of HOSPITALITY
Sri Lankan Entrepreneur of the Year 2017
221-1/1. மின்சார நிலைய வீதி. (2ம் ஒழுங்கை). யாழ்ப்பாணம்
www.sikaram.lk Sikaram Academy


## 55 பவுண் நகை...

திங்கட்கிழமை அதிகாலை நடைபெற்று உள்ளது.

வீட்டில் 62 வயதுடைய முதியவர், அவரது மனைவி மற்றும் மனையின் தாய் ஆகியோர் வசித்து வருகின்றனர். நேற்று அதிகாலை வீட்டின் கூரையை பிரித்து உள்புகுந்த முகமூடி கொள்ளையர்கள் வயோதிபர்களை மிரட்டி 55 பவுண் நகை மற்றும் 15 ஆயிரம் ரூபாய் பணம் என்பவற்றை கொள்ளையடித்து தப்பிச்சென்றுள்ளனர். (ம-101)


விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
(C-4942)
DELIVERY IN 3-5 DAYS
UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
0768226240
மானிப்பாய் • யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
V2 TRAVELS



A/L 2021 கணக்கீடு
Mr. BALAKAJEN
(யாழ்.நகரின் முன்னணி ஆசிரியர்)
KBK CENTRE

| கொழும்புத்துறை Sat & sun 4-5pm | கந்தர்மடம் Tue &Fri 5-6pm |
| --- | --- |
| ஆரம்பம் 05.01.2019 சனி மாலை 4 மணி | ஆரம்பம் 04.01.2019 வெள்ளி மாலை 5 மணி |

075 077 5660
(C-4897)



தேவை
யாழ்ப்பாணம் அரியாலையில் அமைந்துள்ள அசைவ உணவகத்துக்கு சமையல் தெரிந்த பெண் ஒருவரும் கொத்து றொட்டி, பிறைட் றைஸ் தயாரிக்கத் தெரிந்த ஆண் ஒருவரும் உதவியாளர் ஒருவரும் உடனடியாகத் தேவை.
தொடர்புகளுக்கு : 071 104 1851, 078 202 0654



கலை, வர்த்தகம், தொழில் நுட்பம்
DMI JAFFNA
(C-4899)
ஜனவரி-5 காலை-8
DAY CLASS



கலை, வர்த்தகம், தொழில் நுட்பம்
DMI JAFFNA
(C-4899)
ஜனவரி-5 காலை-8
A/L 2k21



Genius Physics Class
A/L 2021
(Tamil, English Medium)
ஆசிரியர் : திரு. S. ஜீவகநாதன் (B.Sc(Physics))
வகுப்புகள் ஆரம்பம்
இடம் : New Everest, Near Inuvil Central College, K.K.S Road, Inuvil.
காலம் : 02.01.2019 Wednesday, 4.00 Pm
இடம் : Techno World, Near Vellington Junction, Perumal Kovil Road, Jaffna Town.
காலம் : 01.01.2019 Tuesday, 4.00 Pm



The Science Corner
2019 Day Class புதிய பிரிவுகள்
ஆரம்பம் - 02.01.2019
Biology - Diversriy - 7.30 am K.கலைவாணன்
Chemistry - Inorganic - 10.00 am K.சுபீசன்
Physics - Light - 12.00 am R.ராகுலன்
Com.maths - தொடர்கள் (Series) - 7.30 am G.ஐங்கரன்
(புதிய மாணவர்களுக்கு முன்னைய பாடங்கள் துரித கதியில் மீட்டல் செய்யப்படும்)
தொடர்புகளுக்கு - 077 430 7829
(www.Fb//thesciencecornerjaffna)
(C-4856)



NEC
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி
வர்த்தகப் பிரிவு A/L 2021
கணக்கீடு K.பாலகஜன்
வணிகக்கல்வி SK.பாலசபேஷ்
பொருளியல்
S.ஜெயக்குமார் K.பிரதீபன்
ஆரம்பம்: 06.01.2019 ஞாயிறு காலை 8.00 மணி
A/L 2018 உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றில் யாழ் மாவட்டத்தில் வர்த்தகப்பிரிவில் 1ஆம், 6ஆம் நிலை உட்பட 3A - 12 பேர், 2A B - 10 பேர், A 2B - 09 பேர், பெற்றுக் கொண்ட மாணவர்களை NEC கல்வி நிறுவனம் சார்பாக பாராட்டி வாழ்த்துகின்றோம்.
A/L DAY CLASS
ஆரம்பம்: 02.01.2019 புதன் காலை 7.00 மணி
(C-4948)



DCM யாழ்.நகர்
வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அருகாமை
A/L 2021
கலை, வர்த்தகப் பிரிவுகள் ஆரம்பம்
06.01.2019 (ஞாயிறு)
காலை 9.00 மணியளவில்
நிர்வாகி
தொ.இல. 077 011 9434
அனுமதிகளை அலுவலகத்தில் பெறவும்
(6847)



Techno World
வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவில் வீதி, யாழ்.
0770175346
A/L 2018 தொழில்நுட்பபிரிவில் சித்தி பெற்று பல்கலைக்கழகம் செல்லும் 68 மாணவர்களையும் வாழ்த்துகிறோம்.
அனைத்து மாவட்டங்களிலும் முதலிடம் Techno World மாணவர்களே....!
உயிர்முறை தொழில்நுட்பம்

| பெயர் | மாவட்டநிலை |
| --- | --- |
| கலக்சிகா | 01 (யாழ்ப்பாணம்) |
| ரஜிதா | 01 (முல்லைத்தீவு) |
| விதுர்சன் | 01 (கிளிநொச்சி) |

உயிர்முறைமை தொழில்நுட்பம்
தனுசியன் - 03
ரீனுயா - 04
கிரிஜனா - 05
கிசோரகா - 06
அசமா பானு - 07
கம்சிகா - 07
நளாயினி - 07
நிலலன் - 08
கஜானி - 09
சுகன்யா - 11
ஜெனிற்றா - 11
டனுசிகா - 11
நிசாந்தினி - 11
கேசங்கா - 12
சுலாகி - 12
யதுர்சன் - 13
வேனுயன் - 15
கிசானிகா - 17
சாருகா - 18
சாரிகா - 18
பரணிகா - 20
ஜிந்துசா - 20
கலக்சன் - 22
ருத்திகா - 21
கிருஸ்திகா - 23
டர்சிகா - 24
சதுர்ஜனா - 29
பவிக்சன் - 25
நிலாஜினி - 28
கைசிகா 30
லவன் - 32
ஜெயசித்ரா - 33
கிரிஸ்ரி திவ்யா - 33
பயிசாளினி - 36
நிலவழகன் - 38
தமிழரசி - 39
தரங்கிதா - 42
பிரவீனா - 42
வினோதா - 45
பூர்விகா - 52
ராஜாஜி - 55
தசாரா - 51

பொறியியல் தொழில்நுட்பம்
விகராதன் - 04
டக்சன் - 06
நசூர்ஷன் முகமட் சர்வீன் - 06
வேனுயன் - 08
திவாகர் - 09
போல் யேசுரட்ணம் - 10
துஜீவன் - 13
தமிழினியன் - 21
ஜிந்துசன் - 25
ஜனிஸ்ரன் - 27
கோகுலன் - 29
கஜந்தன் - 34
துசியந்தன் - 35
டிலக்சன் - 41
விஜித் - 43
கொலின் - 46
ஜோன் கில்டன் - 52
ததுர்சாயினி - 56

தொழில்நுட்ப பிரிவில் இவ்வருடம் அதிகளவு மாணவர்களை பல்கலைக்கழகம் அனுப்பிய ஒரே ஒரு தனியார் கல்வி நிலையம்
(C-4952)
A/L 2021,2019,Day Class
புதியபிரிவு 05.01.2019 9.00a.m



FLC FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்சு
(C-4896)
Embassyஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)
40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 05.01.19 சனி 10 மணி
181, பிரதான வீதி, நெல்லியடி. 0779 789 456 / 0762 669 614 ஆரம்பம் : 07.01.19 3.30pm
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1 IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.



Dream of Studying MBBS / MD
China | Belarus | Latvia | Malaysia
Admission open for 2019 intake


Dalian Medical University - China
Zhengzhou University - China
Grodno State Medical University- Belarus
Riga Stradins University - Latvia
MAHSA University - Malaysia
Duration: 6 years Medium-English
(C-4944)
Colombo : 076 7013060 107, B-1/1 Galle Road, Colombo 06
Jaffna : 077 3013060 77, Clock Tower Road, Jaffna
ICSx Study Medicine Abroad



கலைப் பிரிவு
DMI JAFFNA
ஜனவரி-5 காலை-8
A/L 2k21
தமிழ் R.S. சந்திரசேகர்
இந்துநாகரிகம் P. ஜோதீஸ்வரன்
வரலாறு M. பத்மன்
புவியியல் N. பாபு
அரசியல் K.S. இளங்கோ
அளவையியல் E.S. பவன்
நாடகம் K. மங்களேஸ்
கிறிஸ்தவநாகரிகம் M. ஜோன்சன்
மனைப்பொருளியல் V. சசி
ICT N. அம்பி
விவசாயம் V. சசி
(C-4898)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.01.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.